# வெள்ளி விழாச் சொற்பொழிவுகள்



வெள்ளிவிழா மண்டபம்

## வள்ளியம்மாள் கல்வி அறம்

—1968—1993—

அண்ணாநகர் கிழக்கு—சென்னை-102

அண்ணாநகர்
வள்ளியம்மாள் கல்வி அறத்தின்

# வெள்ளிவிழாச் சொற்பொழிவுகள்

**10-3-93 முதல் 15-3-93 வரை**

தொகுப்பும் பதிப்பும்
**டாக்டர். சா. வளவன்** எம்.ஏ., எம்,லிட்., பிஎச்,டி.,
தமிழ்ப்பேராசிரியர், பச்சையப்பர் கல்லூரி
சென்னை-30

**தமிழ்க்கலைப் பதிப்பகம்**
சென்னை-30

முதற்பதிப்பு : ஜூலை' 93
பக்கம் (90+10 படங்கள்) 100.

விலை ரூபாய் பன்னிரண்டு (12/- )

இந்நூல் நிறுவனர் தம் எண்பதாம் பிறந்த நாள் (முத்துவிழா) அன்று தணிகை முருகன் சந்நிதியில் (5-7-1993) வெளியிடப் பெற்றது.

இதன் வருவாய் அனைத்தும் வள்ளியம்மாள் கல்வி அறத்துக்கே உரியது.

கவின்கலை அச்சகம்
கந்தசாமிநகர், பாலவாக்கம்
சென்னை-600 041
போன் : 41 71 41

# உள்ளே


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | நன்றியுரை | 4 |
| 2 | முன்னுரை | 6 |
| 3 | படம் அன்னையும் அத்தனும் | 7 |
| 4 | ,, அன்னையின் சிலை | 8 |
| 5 | வள்ளியம்மாள் வாழ்க்கை வரலாறு | 9 |
| 6 | வெள்ளிவிழா ஆண்டின் தொடக்கவிழாச் சொற்பொழிவு—திரு. அ. தேவராஜ், எம்.எல் ஏ | 18 |
| 7 | முதுகலை வகுப்புத் தொடக்க விழாச் சொற்பொழிவு—திருமதி. கவிநிலவு தர்மராஜ், எம்.எல்.ஏ. | 23 |
| 8 | வெள்ளிவிழா நிகழ்ச்சிப் படங்கள் | 25 |
| 9 | வெள்ளிவிழா—தொடக்கநாள்—வாழ்த்துரை—திறப்புரை | 33 |
| 10 | இரண்டாம் நாள்—தலைமை உரை—மலர் வெளியீட்டு உரை | 40 |
| 11 | வெள்ளிவிழா நிகழ்ச்சிப் படங்கள் | 45 |
| 12 | மூன்றாம் நாள்—சிறப்புரைகள் | 49 |
| 13 | நான்காம்நாள்—சிறப்புரைகள் | 60 |
| 14 | ஐந்தாம் நாள்—சிறப்புரைகள் | 70 |
| 15 | ஆறாம் நாள்—சிறப்புரைகள் | 86 |

# நன்றியுரை

என்னைப் பெற்று வளர்த்துப் பெரியவனாக்கி, அவை யத்து முந்தி இருக்கச் செய்து, தமிழ் நலம் காண வைத்த அன்னைக்கு—எனக்கு ஐங்குரவனாய் நின்ற அன்னையின் நினைவாக என் வாழ்நாளில் ஏதேனும் செய்ய நினைத்த நாட்கள் பல. யாருமற்ற நிலையில் என்னைக் கட்டிக்காத்த அன்னை என் இருபத்தேழாம் வயதில் (1940-41)பிரிந்தார்கள். அன்று முதல் அவர் நினைவை நிலைநாட்ட முயன்றேன். கடைசியில் 1968இல் அண்ணாநகரிலும் செனாய்நகரிலும் 'வள்ளியம்மாள் கல்வி அறம் கண்டு இருபள்ளிகளைத் தொடங்கினேன். அன்று, இன்றுள்ள நிலையில் இப்பெரு நிலையில் இது வளரும் என நான் கனவுகூடக் கண்டதில்லை. ஆயினும் அன்னையின் மறைந்தும் அருளும் வாழ்த்தும் இறைவன் நல்லருளும் ஒன்று சேர, பல பெரியவர்கள்—அறிஞர்கள் — நல்லவர்கள்—வல்லவர்கள் உடன் துணையும் சேர இன்று சிறக்க அழகிய மணிமண்டபம் அமைத்து வெள்ளி விழாக் கொண்டாடும் நிலையினை எண்ணி என்னை மறந்து நிற்கின்றேன்.

பள்ளியில் கல்லூரியில் பயின்ற மாணவர்கள்—பயிலும் மாணவர்கள் — அவர்தம் பெற்றோர் —நல்லாசிரியர்கள்—கல்வித்துறை அமைச்சர் — செயலர்கள் —பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள்—பள்ளிக்கல்வித்துறை இயக்குநர்கள்—பிற பெரியவர்கள் அனைவரும் என் ஆக்கப்பணிக்கு ஊக்கம் தந்து உற்றுழி உதவினார்கள். அவர்களை யெல்லாம் போற்றி வணங்கி வாழ்த்தி நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

எங்கள் கல்வி அறத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்து பணியாற்றும் எழுவர்தம் உடன் துணையும் உற்றுழி

உதவும் பான்மையும் போற்றக் கூடியன. அவர்களுக்கும் நன்றி.

மற்றும் பல பெரியவர்கள்—தொடர்பு உள்ளவர்கள் தொடர்பு இல்லாதவர்கள் எனப் பலப்பலர் இக்கல்வி அறம் வளர உதவினர். அறத்துக்கு வேண்டிய இடங்களையெல்லாம் அரசாங்கம் வீட்டுவசதி மூலம் வழங்கியது. தாமே வந்து வலிய பொருள் உதவி செய்த நல்லன்பர்களும் உளர். அனைவருக்கும் என் நன்றி.

இன்று இந்நூல் வெள்ளிவிழாச் சொற்பொழிவுகளைத் தாங்கி வெளிவருகிறது. இவ்விழாவில் பங்கேற்று எங்களை வாழ்த்தி வளம் பெற நல்லாசி தந்த சான்றோர்க்கும் ஆன்றோர்க்கும் என் நன்றி உரித்தாகும்,

இச்சொற்பொழிவுகளையெல்லாம் நாடாவில் பதிவு செய்து, அவைகளை ஏட்டில் வடித்து, அச்சிடத் தந்து அவற்றில் வரும் பிழைகளைத் திருத்தி, புகைப் படங்களை ஒழுங்கு பெற அச்சிட்டு, இந்த இனிய நூலை நம் கைகளில் தவழ விட்ட என் அருமை மாணவர்—எங்கள் ஆட்சிக்குழு உறுப்பினர் பச்சையப்பர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். சா. வளவன் அவர்களுக்கும் என் நன்றி உரித்து.

என் நினைவில் கலந்து எனக்கு உதவிய அனைவருக்கும் என்நினைவின் அப்பாலும் நின்று உதவிய பண்பாளருக்கும் நன்றி கூறி அமைகின்றேன். என் அன்னையின் அடிமலர் இறைஞ்சி இறைவன் இன்னருளைப் போற்றி வாழ்த்தி வணங்கி நிற்கின்றேன். வாழ்க நலமெலாம்! வளர்க உயிர்களின் பண்பெலாம்!

வள்ளியம்மாள் கல்வி அறம்,
தமிழ்க்கலை இல்லம்
சென்னை-30

அன்புடன்,
**அ. மு. பரமசிவானந்தம்**

# முன்னுரை

எளிமை இனிமை தொண்டுள்ளம் கொண்ட சான்றோர் குவலயத்தில் கொண்டிருக்கும் கொள்கை உயர்ந்தது.

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'

என்ற திருமூலர் கொள்கையே சான்றோர் கொள்கை. செய்யும் தொழிலைத் தெய்வமாகவும் தமிழாகவும் பார்க்கும் சான்றோர் எங்கள் பேராசிரியரும் ஞானத்தந்தையுமாகிய வள்ளியம்மாள் கல்வி அறத்தின் நிறுவனர் அ.மு.ப. அவர்கள் தொட்டது துலங்கும். 'எடுத்த காரியம் யாவினும் வெற்றி'யே சேரும்.

எண்ணித் துணிவார். துணிந்தபின் திட்டமிடுவார். திட்டமிட்டபின் செயல்படுத்துவார். செயற்பாடு சிறப்புற நிறைவுறும் வரை கண் துஞ்சார்; செவ்வி அருமையும் பாரார். செயல் எப்போதும் கல்வி சார்ந்ததாகவே அமையும். நிறுவனர் அவர்கள் தோற்றுவித்த கல்வி அறம் அவர்தம் முத்துவிழா நாளில் வெள்ளிவிழாக் கண்டு கல்லூரி மேற் படிப்புவரை மேன்மேலும் பொலிவு பெற்றுக் கொண்டிருக் கின்றது.

வெள்ளிவிழாவில் பங்கேற்ற பெருமக்கள் வள்ளியம் மாளின் கல்வி அறத்தையும் நிறுவனரையும் பிரித்துப் பாராமல் இணைத்தே சிறப்பித்துள்ளமையை நூலில் காணலாம். தாயிடமிருந்து இன்றும் தம்மைப் பிரித்துப் பாராமல் ஒன்றியிருக்கும் நிறுவனர் வள்ளியம்மாள் கல்வி அறத்தையும் தாயாகக் கண்டு ஒன்றியிருப்பதில் வியப்பேது மில்லை.

பேராசிரியர், நிறுவனர் தம் முத்துவிழா நாளில் 'வெள்ளி விழாச் சொற்பொழிவுகள்' நூலினைத் தொகுத்துப் பதிப்பதில் மிகவும் பெருமைப் படுகிறேன். என்னையும் இப் பணியில் ஈடுபடுத்தி மகிழவைத்த இறையருளை, நிறுவனர் தம் அருளை என்றும் வேண்டுகிறேன்.

திருத்தணிகை
5—7—1993

பணிவுடன்,
சா. வனவன்



வள்ளியம்மாள் — முத்தியப்பர்
(அம்மையும் — அத்தனும்)



அன்னையின் செம்பொற் சிலை

# வள்ளியம்மாள் வாழ்க்கை வரலாறு

வாய்மையும் சால்பும் விழுமிய குடியும் வண்மையும்
திண்ணிய பொறையு
மாய்தரா நெறியும் சிவகுறி செறிந்த மல்லலம் பகிரதிச்
செல்வர்
ஆயினர்க் கருளி அன்பரை ஆளும் ஆனந்த நற்சிவகாமி
ஆயிவாழ் தளிசேர் அங்கமா நகர் வாழ் அம்பலவாண
மாமணியே (86)

என்றும் பிறவகையிலும் நூறு பாடல்களுள் அங்கபுரத்து அம்பலவாணமாலையில் அதன் ஆசிரியர் திருக்கழுக் குன்றத்துச் சண்முக புராணிகர் ஒரு நூற்றாண்டுக்கு முன் அங்கம்பாக்கம் கிராமத்தினையும் அதன் வளத்தையும் அதில் வாழ்வோர் சிறப்பையும் நன்கு விளக்குகிறார். ஆம்! அந்த அங்கம்பாக்கம் 'நற்றொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து' என்று பெரியோர்கள் பாராட்டிய பெருமைக்குரிய தொண்டை நாட்டுத் தலைநகராகிய கச்சிப்பதிக்குக் கிழக்கே பத்துக்கல் தொலைவில் (பதினாறு கிலோ மீட்டர்) பாலாற்றின் தென்கரையின், வாலாஜாபாத் என்னும் சிறு நகருக்குத் தெற்கே—அப்பாலாற்றைத் தாண்டி அமைந்த சிற்றூராகும். அதில் சுமார் எண்பது வேளாண் குடும்பங்கள் அன்றும் இன்றும் வாழ்ந்து வருகின்றன. கரிகாலன் தன் காலத்தில் தொண்டை நாட்டைச் செழுமைமிக்க நாடாக்கி, கோட்டங்களாகப் பிரித்து, அவற்றுள் வேளாளர்களைக் குடியேற்றினான் என்பது வரலாறு கண்ட உண்மை. இக் கிராமம் இன்று செங்கற்பட்டு (எம்.ஜி.ஆர். செங்கை) மாவட்டத்தில் காஞ்சி வட்டத்தில் உள்ளது. இதில் சென்ற நூற்றாண்டில் சிறந்து வளர்ந்து வாழ்ந்த வேளாண் குடும்பத்

தில் கந்தசாமி முதலியார், மாணிக்க முதலியார் என்ற இருவரும் காமாட்சி அம்மை எனும் மகளும் சடையப்ப முதலியார் என்பாருக்கு மக்களாக வாழ்ந்தனர்.

இம்மூவருள் மூத்தவருக்கு மகப்பேறு இல்லை. காமாட்சி அம்மையார் இளமையிலேயே கணவனை இழந்து தம்பி மாணிக்க முதலியாருடன் வாழ்ந்து வந்தார். அப்படி வாழ்ந்தமைக்குக் காரணம் தம்பிக்கு இரு பெண் குழந்தைகள் இருந்தமையேயாகும். மூத்த பெண் மீனாட்சி அம்மையாருக் குப்பின் 1900ஆம் ஆண்டில் வள்ளியம்மையார், மாணிக்க முதலியார், கன்னியம்மாள் ஆகியோருக்கு மகளாய்ப் பிறந்தார். மூவருள் மாணிக்கத்துக்கு மக்கள் உள்ளமையின் மற்ற இருவரும் இருவரையும் போற்றி வளர்த்தனர்.

மூத்தவர் மீனாட்சி அம்மாள் தன் அம்மான் சின்னசாமி முதலியாரை மணந்து சிறக்க வாழ்ந்தார். எனினும் மகப்பேறு இல்லை. வள்ளியம்மையார் இளமையிலேயே வயது வந்தவராக, பன்னிரண்டாம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. அவ்வூரிலேயே இருந்த பசுபதி முதலியார் இலக்குமி அம்மாள் ஆகியோரின் மூன்றாவது மகனாரான முத்தியப்பருக்கு அவரை மணம் செய்வித்தனர். அந்த இளம் வயதிலேயே பதினான்காம் ஆண்டு நிரம்பு முன்னே 1914 சூலை 5ஆம் நாள் (ஆனந்த ஆனி 22இல்) ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தார். அவரே இன்று அன்னையின் பெயரால் வள்ளியம்மை கல்வி அறம் நிறுவி, கல்வி நலம் காணும் நம் நிறுவனராவர்.

தமக்கை மீனாட்சி அம்மையாருக்கு மகப்பேறு இன்மை யின் ஒரு குலத்துக்கு ஒரு மைந்தனாகப் பெற்ற மகன் போற்றி வளர்க்கப் பெற்றார். இவர்கள் முன்னோர்களுள் ஒருவர் ஒரு காலத்தில்-கும்பினி ஆட்சிதொடங்கிய நாளில்-அந்தப் போர்க் காலத்தில்—(ஆங்கிலேயர் கம்பெனி ஆட்சி)—திருச்சியில் தாசில்தாராக இருந்தாராம். அவர் பெயர் பரமசிவ

முதலியாராகும். 1914இல் ஜெர்மனியின் படையெடுப்பு—முதலாவது உலகப்போர் தொடங்கிய நிலையில் அப்பரமசிவ முதலியாரே இப்போது வந்து பிறந்தார் எனக் கருதி, அப் பெயரோடு பிறந்த ஆனந்த ஆண்டினையும் சேர்த்து, பரமசிவானந்தம் எனவே அப்பிள்ளைக்குப் பெயரிட்டனர். கிராமங்களில் குழந்தை பிறந்ததும் சாதகம் கணித்தல் மரபு. அப்படியே பிறந்த மூன்றாம் நாளில் இக்குழந்தையின் சாதகத்தைக் கணித்த அவ்வூர் வள்ளுவ முதுமகன் இக்குழந்தை, ஊரில் வயல் வேலை செய்யாது—உத்தியோகத்திலே, அதிலும் நன்றாக எழுதும் நிலையில் இருக்கும் என்று அன்று குறிப்பிட்டாராம். எனவே அந்தப் பழைய பரமசிவ முதலியாரைப் போன்று இந்தக் குழந்தையும் சிறப்பான் எனப் பெற்றோர் எண்ணினார்கள். வள்ளியம்மாளுக்கும் பிறகு வேறு மகப்பேறு இல்லை. எனவே ஒரே மகனை நன்கு போற்றி வளர்த்தார்.

வள்ளியம்மாளின் தாயார் கன்னியம்மாள் 1915இலும் தந்தை மாணிக்க முதலியார் 1919இலும் மறைந்தனர். அது வரை ஒன்றியிருந்த குடும்பம் சிலர் இடைபுகுந்து விளையாட, இரண்டுபட்டது. உடன் பிறந்த சகோதரிகள் இருவரும் தனித்தனிக் குடித்தனம் அமைத்தனர். அவர்கள் பெரிய தந்தையார் கந்தசாமி முதலியார் அவர்கள் மகப்பேறு இன்றி விட்டுச் சென்ற வீடும், நிலபுலன்களும் பெரியவராகிய மீனாட்சி அம்மையாருக்கு உரிமையாக, தந்தை மாணிக்க முதலியார் உடைமைக்கு வள்ளியம்மாள் உரிமையாளரானார்.

இருவரும் பக்கத்துப் பக்கத்து வீட்டிலேயே இருந்த போதிலும் அடுத்த பத்து ஆண்டுகளில் அவர்கள் இணைந்து வாழவே இல்லை. பின் 1928இல் முத்தியப்பர் மறைந்த பிறகு இரு குடும்பங்களும் இணைந்தன—என்றாலும் வாழ்வும் வீடும் வேறாகவே இருந்தன.

வள்ளிம்மாளுடன் அவர் மகனுக்காகக் காமாட்சி அம்மாளும் அவர்களுடன் இருந்தார். கணவர் சற்றே நிலை மாறி, அக்காலத்தில் தேவர்களின் அடியவர்களாயிருந்தவர் பால் சார்ந்த காரணத்தால் வள்ளியமமாள் குடும்பத்தில் அமைதி இல்லை, என்றாலும் தன் ஒரே மகனை எப்படி யாவது நன்கு வளர்க்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளின் அடிப்படையில் தம் இல்லற வாழ்வினைச் சில காலம் விடுத்து நிற்க வேண்டிய நிலை உண்டாயிற்று. தன்மகன் வாழ்வே தன் வாழ்வு எனக் கொண்ட அம்மையார் தாம் பல துன்பங்கள் உற்ற போதிலும் பெற்ற மகனைப் பேணி வளர்ப்பதில் கருத் திருத்தினார். உடன் காமாட்சி அம்மையாரும் உற்றுழி உதவினார்கள்.

ஒரே மகனாக இருந்தாலும் அவன் தவறு செய்தால் தண்டிக்கத் தவற மாட்டார்கள். உடலில் சூடுவைத்தலாகிய பெருந்தண்டனை வரையில் அவர்கள் தந்துள்ளார்கள். எப்படியாயினும் தன் மகன் தக்கானாய் வளரவேண்டும் என்ற குறிக்கோளிலேயே அவனை அடித்தும் அணைத்தும் அதட்டி யும் திட்டியும், ஆணையும் அன்பும் குழைத்துக் காட்டியும் வளர்த்தார்கள். தந்தையாரும் இறந்து வேறு தாங்கி உதவத் தக்கவரும் இல்லா நிலையில் அன்னை வள்ளியம்மையார் அவர்களே தம் மகனுக்கு ஐந்து பெருங்குரவராக இருந்து வளர்த்து ஆளாக்கினார்கள். இதை அவர் தம் மகனார்—நம் நிறுவனர்—பாடிய வெள்ளம் விடு தூதில் விளக்கி எழுதி யுள்ளார்.

அம்பலவன் தங்கும் அழகார் திருக்கோயில்
இம்பருல கென்ன எதிர்காண்பாய்—செம்பவள

மேனியனார் கோயிலின்பின் மேஷமென தில்லிருந்து
தானினைந்து நிற்குமெந்தன் தாயானாள்—தூங்னைவரல்

எந்தன் சுகம்காண இன்பம் அடைந்திடுவாள்
துன்பம் அகற்றி எனைச் சோபிப்பாள்—அன்புளத்தில்

ஓர்மகனாய் நின்றஎந்தன் உயர்வேதன் வாழ்வாகச்
சீர்புவியில் வாழ்ந்திடுநற் செல்வமவள்—பேரான

செல்வம் எனக்கெனவே சேர்க்கத்தன் இன்பமெலாம்
ஒல்லாவே என்ன ஒதுக்கினவள்—எவ்வாறும்

நான்மகிழ்ந்தால் தான்மகிழ்வாள் நன்மனத்தில் வாழ்வுற்றுத்
தேன் இனிக்கும் தீஞ்சொல்லைச் செப்பிடுவாள் —மாறான

ஒன்னார் தமக்கிளையா உள்ளத்த ளாய்நின்று
என்னாளும் என்னுயிர்க்கு இன்பமளி—பொன்னான

நற்கருணை கொள்வாள் நலஞ்சிறந்து என்னைவளர்த்
துற்றவனாய்ப் போற்ற உறுதிசெய்தாள்—பெற்றவளே

தானாய் இருந்தாலும் தந்தைபோல் கல்விநலம்
வேண அளித்தென்னை வித்தகனாய்—நானிலத்தே

எல்லாரும் போற்ற எழிலுடைய னாக்கினாள்
பொல்லாங்கைப் போக்கிக் குருவானாள்—நல்லாளாய்

ஐந்து பெருங்குரவர் ஆனாளே யாய்நின்ற
விஞ்சு நலமளிக்கும் மேதக்காள்.

(நூல் கவிதை உள்ளம்—வெள்ளம் விடு தூது—1939இல் எழுதியது)

இவ்வாறு கடிதோச்சி மெல்ல எறிந்து காவலும் காத்து. கற்பன கற்க வழிவகுத்துப் போற்றித் தம்மகனை வளர்த்தாள், எனினும் அவன் தன்னைவிட்டு என்றும் நீங்காதிருக்க வேண்டும் என்ற அவாவினால் வாலாஜாபாத்தில் எட்டாம் வகுப்பு படித்த உடன் மேலே படிக்க வேண்டாம் என வற்புறுத்தினாள். ஆம்! மகன் எட்டாம் வகுப்பு படிக்கும் காலத்தில்தான் (1928) கணவனார் மறைந்தார். அந்த வருத்தத்தாலும் ஒரே மகனைப் பிரிய மனமில்லா நிலையிலும் மேலே படிக்க வேண்டாமென்றும் வீட்டிலேயே இருந்து

சொந்த நிலத்தில் பயிர் செய்து வாழலாம் என்றும் வற்புறுத்தினார். ஆனால் பிள்ளையின் ஆர்வமும் பிற பெரியோர்கள் தூண்டுதலும் சேர, மகனைச் செங்கற்பட்டில் படிக்க அனுமதித்துக் காமாட்சி அத்தையையும் உடன் அனுப்பி வைத்தார். மகனும் தான் ஒருவேளை படிக்காது ஏதாவது வகுப்பில் தவறினால் அந்த ஆண்டே படிப்பை நிறுத்தி விடுவதாகக் கூறினார். அதனால் அன்னையார் மகனிடம் கொண்ட அன்பினாலும் அவன் உடனிருக்க வேண்டுமென்றதாலும் ஆண்டுதோறும் தேர்வில் வெற்றிபெறக் கூடாது என ஆண்டவனை வேண்டுவர். ஆனால் மகன் முறையாகப் படித்துப் பத்தாம் வகுப்பிலும் நன்கு தேர்ச்சி பெற்ற பிறகு, எக்காரணம் கொண்டும் மேலே படிக்கக் கூடாது என்று ஆணையிட்டார். ஆம்! அறியாமையால் அல்ல—அன்பினால்

பின் மகன் வீட்டிலிருந்தே பயிலலாம் என்ற நிலையில். தமிழ் படிக்க விருப்பம் தெரிவிக்க, வீட்டிலேயே படிக்க இசைவு தந்தார். இடையில் ஈராண்டுகள் அண்ணாமலையில் பயில அரைமனத்தோடு விருப்பம் அளித்தாலும், பிறகு அங்கேயும் செல்ல வேண்டாம் எனத் தடுத்தார். பின் மகனார் வீட்டிலேயே படித்துப் பட்டம் பெற்ற பின் மகிழ்ந்ததோடு காஞ்சி ஆந்திரசன் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியனாக வருமாறு வலிய வந்த வாய்ப்பினைத் தட்டிக் கழிக்காது ஏற்றுக் கொள்ளச் செய்தார்.

இடையில் பள்ளிப்படிப்பு முடிந்ததும் மகனாருக்கு மணம் செய்து காண விரும்பினார். அப்படியே அவ்வூரில் உள்ள உறவினர் மகளை மணம் பேசி முடித்தார். எனினும் அந்த மணவாழ்வு மகனுக்குச் சிறக்கவில்லை யாதலால் மனம் வருந்தினார். பின் காஞ்சியில் பணியேற்று ஓராண்டு பணி புரிந்தபின், அன்னையும் பெரிய அன்னையும் மகனின் மண வாழ்வுச் சிறக்கப் பலவகையில் முயன்றும் முடியவில்லையாதலாலும், ஓராண்டு காஞ்சியில் ஓட்டலில் உண்டு தனியாகக்

காலம் கழித்தமையாலும் வேறு மணம் செய்ய முயன்றனர். உக்கல் கோபால முதலியார் மகள் சந்திராமணியினை மண முடித்து, காஞ்சியில் தனிக்குடித்தனம் அமைத்து அக்கா வினை--மீனாட்சி அம்மையினை உடன் துணையாக இருத்தி, வள்ளியம்மாள் அங்கம்பாக்கத்திலேயே இருந்து, அனைத்து நிலபுலன்களையும் தோப்புத்துரவுகளையும் பார்த்துப் பரிபாலித்து வந்தனர். மகனாருக்கு 1940இல் பெண்மகவு பிறந்ததையும் கண்டு களித்தனர்.

பிறகு 1941இல் உடலில் உண்டான புண் புரையோடிய காரணத்தால் நோய்வாய்ப்பட்டு ஒரு சில மாதங்கள் படுக்கையாயிருந்து 1941 ஆம் ஆண்டு ஜனவரி 30/31இல் இறை யடியுற்றார். காஞ்சியிலேயே வேகவதி ஆற்று எல்லையிலே அவர் பூதவுடல் பூந்தணல் இடையில் மறைந்தது. அவர்கள் மறையுமுன் நடந்த ஒரு நிகழ்ச்சியினை அவர்தம் மகனாரும் அருகிருந்த மற்றவரும் இன்றளவும் சொல்லி அவர்தம் தெய்வ நிலையினைப் போற்றுகின்றனர். உயிர் நீங்கச் சில நிமிடங்களுக்கு முன் தன் மகனை அழைத்து 'சிவானந்தம் (இப்பெயரால்தான் அவர் மகனை அழைப்பார்)--நான் போய் வருகிறேன். தேங்காய் உடைத்துக் கற்பூரத்தைக் கொளுத்து' என்றார். அவர் மகனார் அவ்வாறு செய்ததற்கும் அவர் ஆவி பிரிந்ததற்கும் இடைவெளியே இல்லை. (கிராமங் களில் உயிர் செல்லும்போது மக்கள் தெய்வமாகும் அவருக்கு தேங்காய் உடைத்துக் கற்பூர ஆரத்தி செய்து வழிபடுவது இன்றும் வழக்கமாக உள்ளது) ஆம்! அந்த வகையில் கடைசி வரையில் நினைவு நீங்காதிருந்ததோடு தான் இறைநிலை உற்றதை உணர்ந்து நின்ற தன்மை போற்றக் கூடியதல்லவா!

அவர்கள் மறைந்த பின் அவர்தம் பதினாறாம்நாள் சடங்கு சொந்த ஊர் அங்கம்பாக்கத்தில் நடந்தது. அந்த இறுதி நாள் சடங்கினைத் திரு.வி.க. அவர்கள் வந்து நடத்தி வைத்தனர். உடன் சச்சிதானந்தம் பிள்ளை, தெ. பொ.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ரா. பி. சேதுப்பிள்ளை, கோவை. இராமச்சந்திரம் செட்டியார், புரிசை முருகேசமுதலியார், சுந்தரமூர்த்தி ஓதுவார் ஆகியோர் இருந்தனர். அன்று காலை முதல் இரவு ஒன்பது வரை சடங்குகளுக்குப் பின் விரிவுரைகள், சொற்பொழிவுகள், தேவார இசை போன்றவை தொடர்ந்து நடைபெற்றன. இருநூற்றுக்கு மேற்பட்ட புலவர் பெருமக்கள் அன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அத்தகைய பெரியவர்கள் திரு.வி.க. உட்பட நல்லவர்கள் அன்று கலந்து கொண்டமையே இன்று அவர்கள் பெயரால் அறநிலையம் அமைத்துத் தொண்டாற்ற முடிகின்றது என்று அவர்தம் மகனார்—நம் நிறுவனர் அடிக்கடி சொல்லுவார். ஆம்! அது அவ்வளவும் உண்மையாகி—இன்று வள்ளியம்மை கல்வி அறம் வெள்ளிவிழா கொண்டாடிச் சிறக்கிறது.

இவரது அருங்குணங்கள் சிலவற்றையும் இங்கே குறித்தல் வேண்டும். ஆழ்ந்த தெய்வ நம்பிக்கை உடையவர். அவ்வூர் அம்பலவாணர் திருக்கோயிலுக்கு அவர்தம் தந்தையார், பெரிய தந்தையார் போன்று மண்டபம் அமைத்தல், மானியம் அளித்தல் ஆகிய சிறப்புக்களை இவரும் இவர் தமக்கையாரும் செய்துள்ளனர். (இவர் தம் தந்தையாரும் பெரிய தந்தையாரும் தங்கள் சொத்துக்களை மூன்றாகப் பிரித்து ஒன்றை அம்பலவாணர் கோயிலுக்கும் மற்றைய இரு பகுதிகளை இரு பெண்களுக்கும் தந்தனர்). இவர் சுற்றம் தழுவும் பண்பினர். விருந்தோம்பலில் சளைக்காதவர். பிறர் பொருளைச் சிறிதும் விரும்பாதவர். அதே வேளையில் தம் பொருளை யாருக்கும் தவறான வழியில் விட்டுக் கொடுக்காதவர். தவறு கண்டவிடத்தே யாவராயினும் தண்டிக்கும் தன்மையர். நலம் கண்டவிடத்தே போற்றிப் பாராட்டுபவர். எல்லாருக்கும் நல்லவராக வாழ முயற்சிசெய்தவர். ஊரில் உள்ள அனைவரும் அக்காலத்தின

அவர்தம் பண்புகளைப் பாராட்டியதோடு அவர்தம் செயல் திறனையும் ஆட்சித் தன்மையினையும் போற்றிப் புகழ்ந்தனர் என அறிய முடிகின்றது.

1941இல் வள்ளியம்மாள் மறைந்த அந்த ஆண்டிலேயே (அக்டோபர்) பெரிய அன்னையாரும் மறைய, உற்ற துணை நின்ற இருவரும் நீங்கிய நிலையில் உலைவுற்ற மகனார் இரு ஆண்டுகள் பணி ஏற்காது ஓய்வுற்றிருந்தார். பின் 1944இல் சென்னைப் பச்சையப்பரில்பணிஏற்று1976 இல்ஓய்வு பெற்றார். அதற்கு முன்பே 1968இல் இக்கல்வி அறத்தினைத் தொடங்கி, தன் வாழ்வின் ஊதியம் அனைத்தையும் அளித்து வளர்த்தார். அன்னையார் தந்த ஊர் நிலங்கள் பலவற்றை விற்று அறத்துக்கெனக் கட்டடங்கள் அமைத்தார். தம் நூல்கள் விற்பனை அனைத்தையும் அறத்துக்கு உரிமையாக்கினார். அவர்தம் பிள்ளைகள் அனைவரையும் இக்கல்விப் பணியில் ஈடுபடச் செய்தார். நல்லவர் வாழ்த்தினர்—உதவினர்—உயர உற்றுழி ஆவன கண்டனர். இறையருளும் அன்னையின் உடன்உறை ஆசியும் கலந்து நிற்க அந்த வள்ளியம்மாள் கல்வி அறத்தின் வெள்ளிவிழா இன்று நடைபெறுகின்றது.

அதன் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஆக்கத்துக்கு அகன்ற உயர்நிலைக்கும் குழந்தைகள் வகுப்பு முதல் (L K.G.) முதுநிலைவரையில் (Post Graduate) வளரப் பல முறையிலும் எல்லா வகையாலும் இணைந்து, இயைந்து, உடலால் உற்றுழி உழைததும் உளத்தால் வாழ்த்தியும் இக்கல்வி அறததினை வளர்த்து வாழவைத்த அனைவருக்கும் நன்றி.

வாழ்க வள்ளியம்மாளின் புகழ்!
வளர்க கல்வி அறத்தின் தொண்டு!

---

இவ்வரலாற்றினை எழுதியவர் : (வள்ளியம்மாள மேநிலைப் பள்ளி முதல்வர் திருமதி. சண்பகம் அவர்கள்.)

வெள்ளிவிழா ஆண்டின் தொடக்க விழா
15-6-1992 அன்று கல்லூரித் திறப்பு நாளில்
சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்

# மாண்பமை திரு. அ. தேவராஜ்

எம்.எல்.ஏ.

## அவர்கள் ஆற்றிய உரை

---

வள்ளியம்மாள் அறக்கட்டளை சார்பிலே இங்கு நடைபெறுகின்ற வெள்ளிவிழா ஆண்டு தொடக்க விழாவிலே தலைமைப் பொறுப்பேற்க என்னை அழைத்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

இவ்விழாவிற்கு வந்த எனக்கு இப்போது நிறுவனர் அவர்கள் பொன்னாடை அணிவித்துச் சிறப்புச் செய்தார்கள். இது இயல்பாக நடைபெறும் நிகழ்ச்சி. அதற்கு மாறாக இங்கே நானும் நிறுவனர் அவர்களுக்குச் சால்வை அணிவித்துச் சிறப்புச் செய்த புதுமையான நிகழ்ச்சிக்குக் காரணம் என்னவென்றால் 1955-57ஆம் ஆண்டில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் இண்டர்மீடியட் படித்துக் கொண்டிருக்கும் போது, எனக்குத் தமிழைப் போதித்தவர் அவர். அவரிடம் படித்து நல்ல நிலையில் இருக்கின்ற நான் அதனை நினைவு கூர்ந்து இச்சிறப்பினைச் செய்ய விரும்பி இதனைச் செயல் படுத்தினேன். மேலும், இங்கு வள்ளியம்மாள் அறக் கட்டளையின் 25ஆவது ஆண்டு தொடக்கத்திற்காக விழா நடைபெறுகிறது என்றால், எவ்வளவு மாணவ மாணவியர் களை ஓட்டியாடி விளையாட வைத்து, படிக்க வைத்து முன்னேற்றி இத்தகைய ஒரு பெரிய செயலைச் செய்து அருந் தொண்டு ஆற்றியுள்ள உங்கள் நிறுவனர் அவர்களைப் பாராட்டுவது சாலப்பொருந்தும்.

இக்கல்லூரியின் ஆண்டு மலரைப் பார்க்க நேரிட்டபோது எனக்கே புல்லரித்து விட்டது. காரணம் எல்லாப் பாடங்களிலும் 100 சதவிகிதம் என்று பள்ளிக் கல்லூரி மாணவ மாணவியர்கள் தேர்ச்சி பெற்று இருப்பதைப் பார்த்தேன். எப்படிப்பட்ட தேர்ச்சி என்றால் மாநிலத்திலேயே முதலாவதாக தேர்ச்சி பெற்ற விதம் பாராட்டிற்குரியது. அந்தப் பாராட்டைப் பெறும் நீங்கள் மேன்மேலும் கொள்கைகளை வகுத்துக் கொண்டு முயற்சி செய்து முன்னேறும் எண்ணத்தினைக் கொள்ள வேண்டும்.

வள்ளுவர் கூறியது போல,

ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும்—தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

என்பதற்கேற்ப வள்ளியம்மாள் அறக்கட்டளையைத் தம்முடைய தாயின் பெயரால் தொடங்கி, அதில் பயிலும் நீங்கள்நல்ல தேர்ச்சி அடைந்தது பார்த்து மகிழ்தற்குரிய நிலையில் இக்கல்வி நிலையம் விளங்குகிறது. இதற்கு உங்கள் ஒத்துழைப்பு மேலும் தேவைப்படுகிறது.

முதலமைச்சராக இருந்த புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அவர்கள், மூகாம்பிகை வடிவிலே தன்னுடைய தாயைக் கண்டதாக அவரே சொல்லியிருக்கின்றார். எப்போதும் தன் வீட்டிற்கு வெளியே தன் தாயின் திருவுருவத்தை வைத்துள்ள அவர், ஒரு காரியத்தைத் தொடங்கும் போது தன்னுடைய தாயை வணங்கிய பின்பே தொடங்குவார். தெய்வமாகக் கருதுகின்ற தன்மை கொண்டவர்கள் பெண்கள். பெண்கள் என்றால் இயற்கையிலேயே ஆற்றல் உடையவர்கள். பெண் இல்லையென்றால் பாசம் ஏது, அன்பு ஏது, இல்லம் ஏது? குடும்பத்தில் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் அதைத் தீர்த்து வைப்பவர்கள் பெண்கள்தாம். மக்கள், மகள் என்ற நிலையிலும் கூட, தன்

பெற்றோரின் இடையே எழுப்பப் படும் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்குப் பெண்மகளே அங்கு முனைகிறாள். அத்தகைய பொறுமைக் குணம் உடையவள் பெண்.

''மாதர் முகமே எனது புத்தகம்'' என்றார் ரூசோ. 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்றார் வள்ளுவர். 'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்றார் கவிமணி. ஆகவே, பெண்கள்தாம் வாழ்விற்கு அடிப்படை. அவருடைய பெருமையைக் கருதித் தான் முன்னோர்கள் 'தாய்நாடு' என்று கூறுகின்றார்களே தவிர, தகப்பன் நாடு என்றோ, அண்ணன் நாடு என்றோ தம்பி நாடு என்றோ சொல்லவில்லை.

பிறந்த குழந்தைகூட முதன்முதலில் தாய்மொழியில் 'அம்மா' என்றுதான் அழைக்கின்றது. இறைவனைப் பாராட்டும்போது கூட அம்மையே அப்பா என்றும், உமையொருபாகன் என்றும், லஷ்மி நாராயணன், ராதா கிருஷ்ணன், வள்ளிமணாளன், ஆதிபராசக்தி என்றும் பெண்ணிற்கு முதன்மை கொடுக்கின்றனர். தாய்த்திரு நாட்டைப் பாரதி பாராட்டுகின்றபோது,

''வந்தே மாதரம் என்போம் எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்''

என்று பாடியுள்ளார். பெண் குலத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டிய நீங்கள் மேன்மேலும் சிறந்த கல்வியைக் கற்று இந்த அறக்கட்டளைக்குப் புகழ் சேர்க்க வேண்டும்.

புகழ் வாய்ந்த இயேசு, புத்தர், விவேகானந்தர், வீரசிவாஜி போன்றவர்கள் தங்களை ஈன்றெடுத்த அன்னையர் மூலம் சிறந்த அறிவு, ஆற்றல், அன்பு இவற்றைப் பெற்று மேன்மையுற்றது போல நீங்கள் நன்மக்களாக விளங்கிக் கல்லூரிக்குப் புகழைச் சேர்க்க வேண்டும்.

''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து'' என்று மாணிக்கவாசகர் அன்றே பாடியுள்ளார். பேராசிரியர் அ.மு.ப. அவர்கள் அன்னைக்குச் செய்த பெருமை அன்னையர் குலத்திற்கே செய்த பெருமையாகும். தன்னுடைய தாயின் பெயரால் தொடங்கி வள்ளியம்மாள் அறக்கட்டளையை நிறுவியது சாலச் சிறந்தது என்பதைக் கூற விரும்புகிறேன்.

எந்த நாட்டில் பெண்கள் முன்னேற்றம் அடைய வில்லையோ அந்த நாடு முன்னேற்றம் அடையாது என்று காந்திஜி கூறுகிறார்.

''பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில் மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே'' என்று பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார். புரட்சித் தலைவர் பதவி யில் இருக்கும்போது கூட பெண் இனத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் நோபல் பரிசு பெற்ற அன்னை தெரசா பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைத்தார். பெண் இனத் திற்கு என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவற்றை எல்லாம் செய்துள்ளார். புரட்சித் தலைவியை அடையாளம் காட்டியவரே புரட்சித் தலைவர்தான். அந்த அளவிற்குப் பெண் இனத்தின் மேல் நம்பிக்கைக் கொண்டவர் புரட்சித் தலைவர்.

ஆண், பெண் இருவருமே இச்சமுதாயத்தின் இரு கண்களாவர். அதில் ஒன்று பழுதுபட்டால் கூட நாடு முன்னேற்றம் அடைய முடியாது. ஆகையால் இருசாராரும் ஒத்துழைக்கவேண்டும். ஒரு நாடு கல்வி வளர்ச்சியை அடைந்தால்தான் அந்நாடு நல்ல முன்னேற்றத்தினை அடைய முடியும். ஒருநாட்டின் நிலையான செல்வம் அந் நாட்டில் ஓங்கி உயர்ந்துள்ள கட்டடங்கள் அல்ல. அவை இடிந்து விடும். இயற்கை அழகுச் செல்வங்களும் அல்ல. அவை காலத்தால் அழிந்து விடும். எங்களைப் போன்ற

அரசியல் வாதிகளும் அல்லர். காரணம் பின்னால் ஆட்சி மாறக்கூடிய தன்மை உடையவர்கள். ஆனால் பொறியியல் வல்லுநர்களும், மருத்துவ நிபுணர்களும், கல்வி அறிவு பெற்றவர்களும்தாம் நாட்டின் உண்மையான செல்வங்கள் என்று பேரறிஞர் அண்ணா குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சொல்லுக்கு ஏற்ப நல்ல மாணவர்களாகத் திகழ்ந்து இந்த அறக்கட்டளையின் பெயர் ஓங்குகின்ற வகையில் செயல்பட வேண்டும் என்று கேட்டு இந்த வெள்ளிவிழா அறக்கட்டளையைத் தொடங்கி வைத்த பெருமையை அளித்த என் ஆசானுக்கு ஆசானான திரு. அ.மு.ப. அவர்களுக்கும் இங்குள்ள அனைவருக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

வெள்ளிவிழா ஆண்டில் முதுகலை வகுப்புத் தொடக்க விழாவில் (13-7-1992) சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்

# மாண்பமை திருமதி கவிநிலவு தர்மராஜ்
எம்.எல்.ஏ.

## அவர்கள் ஆற்றிய உரை

---

அந்தியில் மஞ்சள் பூசி, ஆதவன் ஒளியைப் பெற்று இளந் தளிர் பசுமை கொண்டு நமது சிந்தையில் வீற்றிருக்கும் தமிழ்த் தாயினை வணங்குகின்றேன், பெண்களுக்குப் பெருமை தேடித்தரும் விதத்திலே இக்கல்லூரி விளங்குகிறது. புள்ளி மான்களெனத் திரியும் பல மாணவச் செல்வங்களைக் கொண்ட இக்கல்லூரி இப்பொழுது வெள்ளிவிழாவை நோக்கி வெற்றிநடை போட்டுக் கொண்டு இருக்கிறது. சான்றோர் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் தன்னடக் கத்துடன், இக்கல்லூரியின் பொறுப்பினை ஏற்றுத் திறமை யாக நடத்திச் செல்கின்ற நிறுவனர் ஐயா அவர்களுக்கும், மற்றும் தாளாளர், ஆலோசகர், தலைவர் என்று பொறுப்பினை ஏற்றுள்ள அனைவருக்கும், கல்லூரி முதல்வர் அவர்களுக்கும் இங்கு வருகை தந்துள்ள பேராசிரியர் அனைவருக்கும், திரளாக வந்துள்ள மாணவர்களுக்கும் என் அன்பு கலந்த வணக்கம்.

இக்கல்லூரியின் முன்னேற்றம் கருதி மேலும் இரண்டு புதிய துறைக்கு அனுமதி பெற்றுத் தருமாறு ஐயா அவர்கள் என்னிடம் கேட்டார். அதன்படி சென்னைப் பல்கலைக்கழகக் கூட்டத்தின் போது இரண்டு துறைக்கு உரிய அனுமதியைப்

பெற்றுத் தருவதாக உறுதி அளித்தேன். அந்த விதத்திலே இங்கு உங்களை எல்லாம் சந்திப்பதில் பெருமையடைகிறேன். உங்களைப் பார்க்கும் போது 'அந்த நாள் ஞாபகம் என் நெஞ்சிலே வருகின்றது' என்று சொல்ல வேண்டும். எனக்குக் கவிநிலவு என்பது சொந்தப் பெயர் அல்ல. மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே 3000 கவியரங்கங்கள் பாடிய முதல் பெண் கவிஞர் என்பதன் காரணமாக மறைந்த நம்முடைய தமிழக முதல்வர் எம்.ஜி ஆர். அவர்கள் வழங்கிய சிறப்புப் பெயரே கவிநிலவு ஆகும்.

பெண்களின் சிறப்பைப் பற்றிப் பேசவேண்டும் என்பதற் காகவே இங்கு நான் உங்களுடன் கலந்து கொள்கிறேன். எத்தனைத் துறைகள் வந்தாலும் அத்தனைத் துறைகளை யும் ஏற்று, நினைத்ததைச் சாதிக்கக் கூடியவர்கள் பெண்கள். அந்தக் காலத்திலே,

''அடுப்பே நீயே சரணாகதியே!
நீ போட்டு மிதியே! எனக்கு
மண்டையில் கிடையாது மதியே!
இதுதான் எங்களுக்குத் தலை விதியே!
எங்களுக்கெல்லாம் வரப்போகிறது அதோகதியே''

என்று அடுப்பு ஒன்றையே எடுப்பாகக் கொண்டு, துடுப்பாக வைத்து நமக்கு இருக்கும் கடுப்பைக்கூட வெளியே சொல்ல முடியாத அளவிற்குப் பொறுப்பு என்பதனை விருப்பம் இல்லாமல் நம் தலைமீது சுமத்தி விட்டார்கள்.

பாரதியார் பாடியிருக்கின்றார்,

நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
நிமிர்ந்த ஞானச் செருக்கும் உள்ளதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்



முதல் நாள் : காஞ்சி ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளாசி வழங்கல்.



திருமதி. சகுந்தலா சுப்பிரமணியம் (தலைவர்) அவர்களுக்குக் கல்லூரிக் குழுச் செயலர் பொன்னாடை போர்த்தல்




முன்னாள் கேரள ஆளுநர் பா. ராமச்சந்திரன் அவர்கள் காஞ்சிபெரியவர் ஆசியுடன் வெள்ளிவிழா மண்டபத்தைத் திறந்து வைத்தல்.




இரண்டாம் நாள் : சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் சாதிக் ஆசிரியர்களுக்கு வெள்ளிவிழாப் பரிசுகள் வழங்குதல்.




இரண்டாம் நாள் : வெள்ளிவிழா மலரைத் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் திரு. டாக்டர் பாலசுப்பிரமணியன் அவர்கள் வெளியிட, ஏற்பவர் தலைவர் டாக்டர் சாதிக் அவர்கள்.



மூன்றாம் நாள் : தலைவர் மாண்புமிகு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களுக்கு அறத்தின் செயலர் பொன்னாடை போர்த்தல்.



சான்றோர் வாக்கு (வெள்ளிவிழா வெளியீடு) முன்னாள் வானொலி இயக்குநர் திரு. செல்வம் வெளியிடத் தொலைக் காட்சித் துணை இயக்குநர் திரு. நல்லதம்பி ஏற்றல்.



நான்காம் நாள்: தலைவர் மாண்புமிகு அரங்கநாயகம் அவர்களுடன் கல்விச் செயலர் திரு. சங்கர சுப்பையன் அவர்கள்.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி

பெண்கள் என்றும் கும்மியே அடித்துக் கொண்டிருந்தார்களா என்றால் இல்லை. குரல் விம்மிவிம்மி காலமெல்லாம் பெண்கள் ஏங்கியதால், சோகத்தில் கண்களெல்லாம் வீங்கிக் கொண்டிருந்தன. பெண்மை தூங்கிக் கொண்டிருந்தது. அந்த ஏக்கத்தின் துக்கத்தை மாற்றக்கூடிய விடிவெள்ளியாக ஆயிரம் ஆயிரம் பெரியார்கள் பெண்மையின் பெருமையை எடுத்துக் கூறியுள்ளார்கள். அந்தப் பெருமையை நிலை நாட்டும் வண்ணம் நம்முடைய முதல்வராகத் திகழும் புரட்சித்தலைவி அவர்கள் விளங்குகிறார்கள். அவர் நம் நாட்டில் உள்ள வறட்சியை, மிரட்சியை, மக்கள் அயர்ச்சியை, மயர்ச்சியை, தளர்ச்சியைப் போக்கி, ஒளிர்ச்சியை மிளிர்ச்சியை, மலர்ச்சியை, மகிழ்ச்சியை ஊட்டிப் பெண்மைக்கு இலக்கணமாகத் திகழ்பவர்; நம் இனத்தைச் சார்ந்தவர்.

பெண்களைப் பூட்டி வைத்த நிலையை எண்ணிய பாரதியார்

''மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்''

என்றார். அக்கனவு நனவாகும் வகையில் அந்தக் காலம் நம்மை நோக்கி விரைந்து வந்து கொண்டிருக்கிறது. நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்லது செய்யக்கூடிய பெண்களின் ஆற்றலை உணர்ந்துள்ளனர் மக்கள்.

ஐயிரண்டு திங்களாய், மெய்யதனிலே காத்து, கையிரண்டிலே ஈன்றெடுத்து, கனியமுதாய் பிறந்து வளர்ந்து மிளிர்ந்து போற்றும் வண்ணம் வாழ்ந்து, இத்தரணி மீதினில்

சித்திரை நிலவென, முத்திரை பதித்திருக்கும் பத்தரை மாற்றுத் தங்கமாய், விஞ்ஞானம் விரிந்து அஞ்ஞானம் அழிந்து தன்ஞானம் தழைத்து எஞ்ஞான்றும் மிளிர்ந்து இருக்கக்கூடிய இஞ்ஞாலத்திலே அதுவிரிக்கும் காலத்தின் கோலத்திலே உள்ளத்தின் ஆழத்திலே வீற்றிருக்கக் கூடிய ஆற்றலுடையது எது என்றால் தாய்மை ஒன்றுதான். அத்தகைய பெண்மைக்குப் பெருமை தரக்கூடிய வகையில் இக்கல்லூரி விளங்குகிறது.

''ஆணுக்குப் பெண் நிகர்'' என்று கூறினாலும் கூட, பெண்களே பெண்களை அடிமைப் படுத்தும் நிலை முதலில் மாற வேண்டும். இந்நிலை மாற வேண்டுமெனில் தலை முறைகள் மாற வேண்டும். பெண்களின் சிறப்பினை நோக்கு மிடத்து நாட்டுக்கு, வீட்டுக்கு, நதிக்கு, பூமிக்கு, படிப்புக்கு, பண்புக்கு என்று சுட்டியதோடு அலைமகள், கலைமகள், மலைமகள், அஷ்டலஷ்மி பெயர்கள் உட்படப் பெண் தெய்வங்களாகவே குறிப்பிடுகிறார்கள். அதனால்தானோ என்னவோ பெண்களைப் பூட்டி வைத்து விட்டனரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆவதும் அழிவதும் பெண்ணாலே என்பார்கள். ஆனால் நன்மையை ஆக்குவதும் பெண்; தீமையை அழிப்பதும் பெண் என்றும் பொருள் கொள்ளலாம். அடிக்கடி 'பெண் புத்தி பின்புத்தி' என்பர். ஆனால் தமிழில் ''பின்'' என்பதற்குக் ''கூர்மை'' என்ற பொருளும் இருக்கிறது. ஆகவே கூர்மை யான புத்தி என்பதை மாற்றித் திரித்துக் கூறியிருக்கிறார்கள்.

உலகத்திலே என்றும் பெண்கள் உயர்ந்த இடத்தைப் பெற்றவர்கள்தான் என்பதற்குச் சான்றாக, ரஸியா பேகம், ஜான்சிராணி, அன்னை தெரசா, நைட்டிங்கேல், ஔவையார், காரைக்கால் அம்மையார், இன்னும் பல பத்தினிகள், தியாகிகள் என்று குவிந்து இருந்த காரணத்

தினால்தான் இன்றும் சமூகம் சமூகமாக சென்று கொண்டிருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கண்ணகியால் சிலம்பும் சீதையால் இராமாயணமும் திரௌபதியால் மகாபாரதமும் உருவானது. ஆனால் இன்றோ பெண்களால் பல்கலைக்கழகமே உருவாகிக் கொண்டு இருக்கிற சீரும் சிறப்புமான நிலை விளங்குகிறது.

அரசியலுக்கு வரும் விருப்பம் படைத்த இளைஞனுக்கு அண்ணா கூறும் அறிவுரை, மக்களோடு இருந்து குறைகளை அறிந்து தெளிந்து தேவையைப் புரிந்து சேவை செய்ய வேண்டும் என்றும், பொதுமக்களுக்குச் சேவை செய்ய முனைபவர்கள் அறிந்து கொள்ள வேண்டியது அறிவியல், உடலியல், உயிரியல்; சித்தாந்த, வேதாந்த தத்துவம் அல்ல, மக்களைப் புரிந்து கொள்ளக் கூடிய மனநூல் தத்துவமே தேவையானது என்றார். அதையே கடைபிடிக்க வேண்டும். முதலில் நம்மை நாம் புரிந்து கொண்டு பிறகு சுற்றுப் புறத்தையும் புரிந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

என்னைப் பொறுத்தவரை பெண்கள் முன்னேற்றத்திற்காக என்னால் முடிந்த உதவிகளைச் செய்து கொண்டு வருகிறேன், முடக்குறிச்சித் தொகுதியில் நான் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி வருகிறேன். மேலும் அகில இந்திய அளவிலே பெண்கள் முன்னேற்றச் செயலாளராகப் பணியாற்றி வருகிறேன். ஆனால் இந்த இரண்டு பணிகளில் மிகவும் நேசிப்பது மகளிர் அணிச் செயலாளர் பதவி.

படித்த பண்புள்ள உங்கள் முன்பு கூறுவதற்குக் காரணம், எதையும் தாங்கும் இதயம் படைத்த உங்களால் எதையும் சாதிக்க முடியும் என்பதால் கூற விரும்புகிறேன். வெள்ளி விழாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிற இக்கல்லூரி மேன்மேலும் தழைத்து வள்ளுவர் கூறியதின்படி எண்ணும்

எழுத்தும் இரண்டு கண்கள் என்று கொள்வதோடு ஒழுக்கத்தையும், துணிவையும் நீங்கள் பெற்றுத் திகழ வேண்டும்.

இவ்வாறு நான் இந்த அளவிற்கு வருவதற்கு முன் பல சத்திய சோதனைகளை என் வாழ்க்கையில் சந்திக்க நேர்ந்தது. ஆனால் துணிவும், ஒழுக்கமும் இருந்த காரணத்தால் சட்டமன்ற உறுப்பினராக உங்கள் முன்பு நிற்கும் வாய்ப்பையும் விருந்தினர் என்ற வாய்ப்பையும் பெற்றுள்ளேன்.

எக்காலத்திலும் அறிவுரை கூறுபவர்கள் இருந்து கொண்டே வருவார்கள். ஆகவே, எத்துணைத் துன்பங்கள் வந்தாலும் அவை அனைத்தும் கடந்து வந்த பின்பு உயர்நிலை அடைவது திண்ணம். உங்கள் கல்லூரியின் குறிக்கோள் 'Think High''.—என்றும் உயர்ந்ததையே நினைக்க வேண்டும். ஆகவே எண்ணும், எழுத்தும் கற்று, திறமை, ஆற்றல் பெருமை ஆகிய அனைத்திலும் உயர்ந்தவர்களாக நல்லதைச் செய்யக் கூடியவர்களாகத் திகழவேண்டும்.

இவ்வாறு அனைத்துப் பண்புகளிலும் ஒளி பெற்றுத் திகழும் பெண்மணிகளாக விளங்கவேண்டும். ஆயகலைகள் அறுபத்து நான்கிற்கும் சொந்தக்காரர்களாகத் திகழும் பெண்களாகிய நாம் மேன்மேலும் சீரும் சிறப்பும் பெற்று விளங்கவேண்டும் என்று கூறி முடித்து எந்த உதவி உங்களுக்குத் தேவைப் பட்டாலும் என்னை வந்து அணுகலாம் என்பதை இங்கு தெரிவித்துக் கொண்டு உங்கள் சகோதரி என்ற நிலையில் எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

# வெள்ளிவிழா—தொடக்க நாள்

வெள்ளிவிழா மண்டபம் திறப்புவிழா நாளன்று ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி **ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்** அவர்களின் வாழ்த்துரை. (10-3-93)

சரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி
வித்யாரம்பம் கரிஷ்யாமி சித்திர் பவதுமே சதா.

கல்வி கற்கும்போது ஒவ்வொருவரும் சரஸ்வதியை வணங்க வேண்டும் என்பது நியதி. சரஸ்வதி வெண்தாமரையில் உள்ளவள். நல்லறிவைத் தரும் சுவடியை வைத்திருப்பவள். தூய்மையான ஆடையை அணிந்திருப்பவள். ஞானக் களஞ்சியமாக இருப்பவள். கல்வி, தூய்மை, அறிவு இவற்றை வளர்ப்பதால் அது சரஸ்வதியின் வடிவமாகப் போற்றப் பெறுகிறது. இப்போது நாம் காணும் எல்லாப் பொருளிலும் கலப்படம். இதில் கூடாது. கல்விவெண்மை—தெளிவு—தூய்மையுடையதாய் இருக்க வேண்டும். கலப்படம் வேறு பொருளில் இருப்பின் அதனை அறிந்து நீக்கிக் கொள்ளலாம். ஆனால் கல்வியில் கலப்படம் கூடாது; கலந்தால் நீக்க முடியாது.

பள்ளியில் படிக்கும்போது (uniform) சீருடை அணிவது ஒற்றுமையை வளர்க்க. அதைவிட முக்கியமானது மனத்திலே-உள்ளத்தூய்மை, ஒரே சிந்தனை, செயல் திறமை ஆகியவை கல்வியில் இருக்க வேண்டும், மனத்தில் எந்தக் குழப்பமும் கூடாது. ஒற்றுமை வெளியில் தோன்ற (uniform) சீருடை அணிகிறோம். உள்ளத்தின் ஒற்றுமை—மனத்தூய்மை பெறுவது கல்வியால் பெற முடியும். 'கல்விக்கழகு கசடறக் கற்றல்'. எனவே தூய்மையாக—தெளிவாகக் கற்க வேண்டும்,

பழங்காலத்தில் பள்ளிகள் எல்லாம் நீதி—தெய்வ பக்தியைப் போதித்தன; அறத்தை வளர்த்தன. மனிதன் தேவனாக மாற வேண்டும் என்று சொன்னது அந்தக் காலம். மனிதன் மனிதனாக இருந்தால் போதும் என்று விரும்புவது இந்தக் காலம். மனிதன் மிருகமாக மாறாமல் இருந்தால் போதும். நல்லதை அறிந்து கொள்ளும் ஒரே இடம் பள்ளி. முன்பு பள்ளியாக இருந்த இந்நிறுவனம் கல்லூரியாக வளர்ந்துள்ளது. அது போல நல்ல சிந்தனையும் செயல்பாடும் உடையதாக இருக்க வேண்டும். வள்ளியம்மாள் கல்வி நிர்வாகம் நன்கு வளர்ந்து செழிக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விடைபெறுகின்றேன்.

திருமதி சகுந்தலா சுப்பிரமணியம் அவர்கள் தலைமை ஏற்றார்கள். **மாண்பமை திரு. சி. சுப்பிரமணியம்** அவர்கள் அனுப்பிய வாழ்த்துரை.

---

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்களைப் பல ஆண்டுகளாக அறிவேன். அவர் வெறும் பேராசிரியர் மட்டுமல்லர், நல்ல பண்பாளர், அத்துடன் சிறந்த செயல்வீரர். அவருடைய அன்னையார் வள்ளியம்மை அவர்கள் பெயரால் ஒரு கல்வி அறக்கட்டளையை நிறுவி ஒரு பெரிய கல்வி நிறுவனத்தை உருவாக்கி ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்குக் கல்வி புகட்டும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளார். சிறிய அளவில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப் பட்ட இக்கல்வி நிறுவனம் இன்று வளர்ந்து பல ஆயிரக்கணக் கான மாணவ மாணவியரைக் கொண்டு விளங்குகிறது. இன்று, வள்ளியம்மாள் கல்வி அறம் வெள்ளி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகிறது.

சிறந்த இந்தப் பள்ளியின் சிறப்புக்கு முக்கிய காரணம் அ.மு.ப.வின் செயல் திறன்தான் என்று சொல்ல வேண்டும். நல்ல ஆசிரியப் பெருமக்களைத் தேர்ந்தெடுத்து மாணவர் களுக்கு அறிவும் பண்பும் செயலாற்றலும் பெறக் கூடிய முறை யில் பயிற்சி அளிக்கப்பட்டு வருவது போற்றுதற்குரியதாகும்.

வள்ளியம்மாள் கல்வி அறம் மேன்மேலும் வளர்ந்து தமிழ்நாட்டு மக்களுக்கு நல்ல பணியாற்றிவரும் என நம்பு கிறேன். இந்நற்பணியில் ஈடுபட்டிருக்கும் எல்லாருக்கும் எனது பாராட்டுக்களும் நல்வாழ்த்தும் உரித்தாகுக.

**சி. சுப்பிரமணியம்**

## கேரள மாநில முன்னாள் ஆளுநர் மாண்பமை பா. இராமச்சந்திரன் அவர்களின் சிறப்புரை (10-3-93)

ஜகத்குரு சுவாமிகள் அவர்களே! இளையவர் அவர்களே! கல்வி நிறுவன ஸ்தாபகர் அ.மு. பரமசிவானந்தம் அவர்களே! நிகழ்ச்சிக்குத் தலைமையேற்க வந்துள்ள திருமதி சுப்பிர மணியம் அவர்களே! வணக்கம்.

இந்தப் பள்ளியில் வந்து, வானளாவிய கட்டடங்களைப் பார்த்தபோது நான் அதிர்ச்சியும் வியப்பும் அடைந்தேன். நீண்ட நெடுங்காலமாக என்னோடு பழகியவர்—தமிழ்ப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர்—என் தமையனா ருக்கு மிகவும் வேண்டியவர்—இந்த 25 ஆண்டுக் காலத்தில் மாபெரும் ஸ்தாபனத்தை உருவாக்கியுள்ளார். இதை யெண்ணி வாழ்த்துகிறேன்; பாராட்டுகின்றேன்; மேலும் பல வளம் பெற வாழ்த்துகிறேன். இங்கு திரு. சுப்பிரமணியம் வந்திருப்பார்; கல்வி பற்றிப் பேசுவார் என நான் நினைத் தேன். தமிழகத்தில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாகக் கல்விப் பணியில் திரு. சுப்பிரமணியம் இருந்தவர். கல்விக்கு மெருகேற்றப்பட்ட காலம்—சுப்பிரமணியம் அமைச்சராக இருந்த காலமாகும். விவசாயி அகலமாக உழுவதைவிட ஆழமாக உழவேண்டும் என்பார். அதுதான் சிறந்த கல்வி எனச் சொல்லுவார். நம் நாட்டில் பெரியவர் அவர்கள் சொன்னது போல கல்வி தூய்மையானதாக இருக்க வேண்டும். சமுதாயம் நன்றாக அமைந்தால் ஆசிரியர்கள் பாராட்டப் பெறுவார்கள். கல்விப் பணியைக் கடவுளுக்குச் செய்யும் தொண்டாக ஆசிரியர்கள் கருத வேண்டும். கட்டடங்கள் மட்டும் நமக்குப் பெருமை தருவன அல்ல, ஆசிரியர் தம் கடமையைச் செய்வதும், பெற்றோர்கள் அதைப் பாதுகாத்து வளர்ப்பதும் செய்யத்தக்க கடமைகளாகும். ஆசிரியர்—இறைவனுக்கு ஒப்பானவர். எழுத்தறிவித்தவன் இறைவன் எனப் பெரியோர் சொன்ன சொல் வீணானதல்ல. ஆனால் இப்போது உள்ள ஆசிரியர்கள் அப்படி நடக்கிறார்களா என

எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிக் கூறுவது குறித்து ஆசிரியர்கள் தவறாக நினைக்கக்கூடாது. நானும் ஆசிரியனாகப் பணியாற்றியவன்தான். ஆசிரியர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பழங்காலத்தில் தோன்றிய நூல் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. கல்வி பற்றிப் பேசும்போது ஆசிரியர்கள் அதற்குரிய தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும். நான் ஆசிரியனாக இருந்தபோது போராட்டம் நடந்தது. கல்வியில் போராட்டம் நுழைவதை நான் விரும்பவில்லை. படிப்பதிலே கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும். இப்பள்ளியும், கல்லூரியும் அப்படி நடக்கும் என்பதில் ஐயமில்லை. திரு. அ.மு.ப. அவர்கள் கடமையறிந்து பணியாற்றுபவர்.

கல்விக்கு முதலிடம் தரும்போது அக்கல்வி பயனுள்ள கல்வியாக இருக்க வேண்டும். கல்வியை 'Passport of job' என நினைக்கக்கூடாது. கல்வி—திறமையை வளர்க்கப் போதிக்கப்படுகிறது; அது எதிர்காலத்தில் நல்ல வாய்ப்பினை அளிக்கும் என நம்பவேண்டும். இந்நிகழ்ச்சியில் என்னைப் பங்கேற்கச் செய்தமைக்குத் திரு. அ.மு.ப. அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன். பெரிய அளவில் நிறுவனத்தை வளர்த்துள்ள ஐயா அ.மு.ப. அவர்களுக்கு இறைவன் நீண்ட ஆயுளைத் தர வேண்டும் என வேண்டி விடை பெறுகிறேன். வணக்கம்.

## பாலபெரியவர் சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் வாழ்த்துரை (10-3-93)

'ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு'

கல்வி—வித்தை—உயர்ந்த செல்வம்; திருடப்படாத செல்வம்; சாஸ்வதமான செல்வம்; கொடுக்கக் கொடுக்க குறையாத செல்வம். நல்ல வழியினை வகுத்துக் கொள்ள கல்வியைக் கற்கிறோம். அக் கல்வியினாலே திறமையும் நல்ல எண்ணமும் வளர வேண்டும். இந்த உலகத்திற்கான கல்வி—ஞான உலகத்திற்கான கல்வி என இருவிதக் கல்வியினைக் கூறுகிறார்கள். 'இவ்வளவு படித்தும் இப்படிச் செய்கிறார்களே?' என்பர். இதிலிருந்து கல்வி நல்ல எண்ணங்களை வளர்ப்பது என்பது தெரிகிறது. கல்வியில்லாது பணம் இருந்தால் மற்றவரை அடிமைப்படுத்துவர். பண்பில்லாது, கல்வி இருந்தால் எதற்கெடுத்தாலும் விவாதம் செய்வர். சரீரத்தில் பலம் இருந்தால் மற்றவரை இம்சிப்பார்கள். ஆனால் பணமும், படிப்பும், பலமும் நல்ல சிந்தனை உடையவர்களிடத்து இருந்தால் நலமுண்டாகும். கல்வி உடையவர்களிடத்து இவை மூன்றும் நல்ல பயன்தரும். கல்வியோடு பக்தியும், நல்ல எண்ணமும் வளர்க்கும். கல்வியோடு பக்தியும், நல்ல எண்ணமும் வளர்க்கும் விதத்தில் நாம் செயல்பட வேண்டும். ஆதிசங்கரர் கல்வி பற்றி மூன்று கருத்துக்களைத் தருகிறார். அவை,

1. நல்ல படிப்பு படிக்க,
2. நல்ல ஆரோக்கியம் பெற,
3. பொருளை நல்லவர்களுக்குத் தர

என்பதாகும். நாம் வாழும் தேசம் பண்புள்ள தேசம். மெகஸ்தனீஸ் தம் நூலுள் இதை 'நல்ல படிப்புள்ளவர்கள் வாழும் தேசம்' எனக் கூறுகிறார். பிரசித்தி—பெருமை

இவையிரண்டிற்கும் வேறுபாடு உண்டு. பிரசித்தி—திருடினாலும் வரும். பெருமை – நல்ல காரியத்தினால் நான்கு பேர் தெரிந்து கொள்வது.

நம்முடைய வில்லிபாரதம்-கம்பராமாயணம், திருக்குறள் ஆகியவற்றைப் படிப்போடு சொல்லிக் கொடுக்க வேண்டும். இக்கல்வி நிறுவனம் நன்றாக வளர வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

# வெள்ளிவிழா இரண்டாம் நாள் பள்ளி மாணவர் நாள் (11-3-93)

**மாண்புமிகு உயர்திரு டாக்டர் எஸ், சாதிக் (சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்) தலைமை ஏற்று ஆற்றிய உரை.**

மதிப்பிற்கும் உயர்வுக்குமுரிய வள்ளியம்மாள் கல்வி அறத்தின் நிறுவனரும், கல்வித் தொண்டில் நீண்ட நெடுங் காலமாக ஈடுபட்டுச் சேவை செய்து வருகின்றவருமான பேராசிரியர் அ.மு.ப. அவர்களே! மேடையில் அமர்ந்திருக்கும் பெரியோர்களே! மாணவச் செல்வங்களே! வணக்கம்.

நிதி அமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழகத்தின் சிறந்த நடமாடும் பல்கலைக் கழகமாக விளங்கி ஆட்சியை நடத்திச் செல்லும் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் இவ்விழா விற்குத் தலைமை ஏற்று நடத்துவதாக இருந்தார். அவர் நாளை சட்டமன்றத்தில் ஆண்டு வரவு செலவைத் தர வேண்டியுள்ளதால் இன்று வர இயலாமல் போகவே நான் தலைமைப் பொறுப்பு ஏற்கும்படி ஆயிற்று. இப் பொறுப்பை வழங்கிய ஐயா அவர்களுக்கு நன்றி கூறக் கடமைபட்டிருக் கின்றேன்.

சென்னைப் பட்டினத்தில், குறிப்பாக அண்ணாநகரின் மத்திய பகுதியில் ஒரு சிறந்த கல்லூரியைக் கொண்டு, அதோடு நிறைந்த பள்ளிகளையும் நடத்தி வருகின்ற வள்ளியம்மாள் கல்வி அறத்தை நான் மனமாரப் பாராட்டு கின்றேன். 25 ஆண்டுக் காலமாக நடந்து வந்த செய்தி

களைத் தொகுத்து, சிறந்த முறையில் வெள்ளிவிழா மலரை இங்கு வெளியிட்டிருக்கிறார்கள். இதை உற்று நோக்கும் போது இவர்களின் உழைப்பும், மேன்மையும் நன்கு புலப்படு கின்றன.

135 ஆண்டுக் காலமாக நடந்து வரும் பல்கலைக் கழகத்தில் கூட இத்தகைய சிறந்த பெருங்கூடம் இல்லை என்று கூறலாம். அந்த அளவிற்கு ஒரு சிறந்த வெள்ளிவிழா மண்டபத்தை மாணவர்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் அமைத்திருப்பதைப் பார்க்கும்பொழுது ஐயா அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. இந்த வள்ளியம்மாள் கல்வி அறம் எல்லாவிதமான வசதிகளையும் கொண்டதாக இருப்பதை நோக்கும்போது என் வாழ்க்கையின் ஒரு செய்தி தான் நினைவிற்கு வருகிறது.

50 ஆண்டுகளுக்கு முன் பாளையங்கோட்டையில் நான் கற்கப் பள்ளிக்கூடம் செல்வதற்குப் பல இடர்ப்பாடுகளை அனுபவித்தவன். பள்ளிக்கூடம் வெகுதூரத்தில் இருக்கும். பேருந்து வசதி கிடையாது. நடந்தேதான் சென்று படிக்க வேண்டும். பள்ளிக்கூடத்திலும் சாதாரண வசதிகள் என்பதுகூடக் கிடையாது. இதை ஒப்பிட்டுப் பார்க்கும் போது நீங்கள் அனைவரும் எத்தகைய அதிர்ஷ்டசாலிகள் என்பது புலப்படும். எல்லாவிதமான வசதிகளையும் கொண்டது இவ் வள்ளியம்மாள் கல்வி அறம். நடந்தே சென்று படித்து வரலாம். நடந்தாலும் அதிக தூரமில்லை. இத்தகைய சிறந்த வசதிகளைக் கொண்டது இவ் வள்ளியம்மாள் கல்வி அறம் என்றால் மிகையாகாது.

முன்பெல்லாம் பொறியியல் துறை படிக்க வேண்டும் என்றால் 450 கிலோ மீட்டர் கடந்து சிதம்பரம் சென்று படிக்க வேண்டிய நிலை இருந்து வந்தது. ஆனால் இன்று இந்நிலை மாறியுள்ளது. உங்கள் குடியிருப்பின் அருகேயே

வள்ளியம்மாள் கல்வி அறம் அனைத்து வசதிகளையும் கொண்டு புகழ் பெற்ற கல்வி அறமாகத் திகழ்ந்து வருகிறது. இத்தகைய சிறந்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்ற இக் கல்வி அறத்தின் நிறுவனர் ஐயா அவர்களைப் பாராட்டி, மேலும் மேலும் இக்கல்வி அறம் பல பள்ளிகளையும், பல கல்லூரிகளையும் தோற்றுவித்து, புதிய, புதிய பாடத்திட்டங்களையும், நவீனக் கருவிகளையும் கொண்டு நகர்ப்புறத்திலே ஒரு தலைசிறந்த கல்வி நிறுவனமாக விளங்க வேண்டும் என்று வாழ்த்தி விடை பெறுகின்றேன். வணக்கம்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் **டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்** அவர்கள் வெள்ளிவிழா மலரை வெளியிட்டு ஆற்றிய உரை.
(11-3-'93)

---


இன்றைய விழாவின் தலைவர், மதிப்பிற்குரிய உயர்திரு. சாதிக் அவர்களே! என்னை வளர்த்து ஆளாக்கிய பேராசிரியர் அ.மு.ப. அவர்களே! என் அருமைத்தம்பி டாக்டர். அரசு அவர்களே! பெரியோர்களே! மாணவ, மாணவியர்களே! அனைவருக்கும் வணக்கம்.

எதிர்பாராமல் கிடைக்கின்ற பதவிதான் எப்பொழுதும் மகிழ்ச்சியைத் தரும். அவ்வகையில் இன்று எனக்குக் கொடுத்த இவ்வாய்ப்பு பெருமகிழ்ச்சியினைத் தருகிறது. பேராசிரியப் பெருந்தகை கட்டிக் காத்து வருகின்ற இந் நிறுவனத்தின் வெள்ளிவிழா தொடக்க நாள் விழா அன்றே கலந்து கொள்ள நினைந்தேன். சில முக்கியமான பணிகளில் ஈடுபட்டிருந்ததால் இன்று கலந்து கொள்ள நேரிட்டது. என்னை வளர்த்து ஆளாக்கியவர்கள் இருவர். ஒருவர் அமரர் மு.வ. மற்றொருவர் அ.மு.ப. அவர்கள். இன்று நான் பல்கலைக்கழகத் துணைவேந்தராய் உயர்வதற்கு உறுதுணையாக இருந்தவர் இவர். நான் ஏற்காட்டில் இருந்து எம்.லிட். பட்டம் பெறுவதற்கும், ஆராய்ச்சிப்பட்டம் பெறுவதற்கும் பெரிதும் உறுதுணையாக இருந்தவர் அ.மு.ப.

அந்தக் காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று வந்தபோது தான் பெற்ற உதவித் தொகையான 15 ரூபாயில் 1-25 ரூபாயை மிச்சப்படுத்திச் செம்மையான வாழ்க்கையை நடத்தி இன்று இந்த உயர்ந்த நிலைக்கு வளர்ந்து நமக்கெல்லாம் ஓர் இமாலய எடுத்துக்காட்டாக அமைந்துள்ளார். 'உண்மையான உழைப்பால் உயரமுடியும்' என்ற முதுமொழிக்கு ஏற்ப செங்கல், செங்கல்லாகக் கொண்டு மெல்ல, மெல்ல உயர்ந்து இன்று ஒரு மாபெரும் கட்டடத்தை உருவாக்கியுள்ளார்.

இன்று வெள்ளிவிழா மலரை வெளியிடும் பேற்றினை நான் பெற்றுள்ளேன். அம்மலரில் எம்.ஜி.ஆர். அவர்கள், தாமே தம் கைப்பட பாராட்டி எழுதியுள்ள கடிதம் இடம் பெற்றுள்ளது. அதைப் படித்துப் பார்த்தால் எம்.ஜி.ஆர். அவர்கள், எந்த அளவிற்கு ஐயா அவர்கள் மீது அன்பு கொண்டிருந்தார் என்பதும், அவருடைய தமிழ்ப்பணி, கல்வித்தொண்டு மீது எத்தகைய பக்தி கொண்டிருந்தார் என்பதும் புலப்படும். இம்மலரில் பல நிழற்படங்கள், சொற் பொழிவுகள் சிறந்த முறையில் இடம் பெற்றுள்ளன. இம் மலரை நோக்கும்போது ஐயாவின் உண்மையான உழைப்பும், அளப்பிலா கல்விப் பணியும் நன்கு புலப்படுகின்றது. இத்தகைய சிறந்த மலரை நான் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைய நிகழ்ச்சியின் தலைவர் திரு. சாதிக் எளிய குடும்பத்தில் பிறந்து சிறிது, சிறிதாக வளர்ந்து இன்று உயர் நிலைக்கு வந்தவர். ஒரு நாளில் 20 மணி நேரம் உழைத்து, அதனால் முன்னேற்றம் அடைந்தவர். இத்தகைய உயர்ந்த நிலையை அடைந்த சாதிக் அவர்களுக்கு வெள்ளிவிழா மலரின் முதல் படியைக் கொடுப்பது சாலச் சிறந்தது என்று சொல்லி வாய்ப்பிற்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்!



நான்காம் நாள் : 'நல்லவை ஆற்றுமின்' (வெள்ளிவிழா வெளியீடு) கல்விச்செயலர் உயர்திரு. சங்கர சுப்பையன் அவர்கள் வெளியிட, சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. கோவிந்தராஜுலு அவர்கள் ஏற்றல்



ஆசிரியர்தம் கலை நிகழ்ச்சி.




**ஐந்தாம் நாள் : பட்டமளிப்பு விழா**


இந்தியஅரசின் இணைஅமைச்சர் மாண்புமிகு அருணாசலம் (தலைவர்) அவர்களுக்கு நிறுவனர் பொன்னாடை போர்த்தல்



தலைவர் மத்திய அமைச்சர் அவர்களும், வருமானவரித்துறைத் தலைவர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்களும் நிறுவனரைப் பாராட்டி மகிழ்தல்.



திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களுடன் நிறுவனர்.



ஆறாம் நாள் : தலைவர் மாண்புமிகு குஜராத் உயர் நீதிமன்றத் தலைமை நடுவர் திரு. பு. ரா. கோகுலகிருஷ்ணன் திருமதி கவிநிலவு தர்மராஜ், எம். எல். ஏ. ஆகியோருடன் நிறுவனர்.



அன்னை வள்ளியம்மாள் சிலை திறப்பு, மகளிர் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் வசந்தி தேவி அவர்கள்



வள்ளியம்மாள் சிலை திறப்பு — படையல் — மாண்பமை திரு. பு. ரா. கோகுலகிருஷ்ணன் ஏற்றல்.

# வெள்ளிவிழா—மூன்றாம் நாள்—
# கல்லூரிமாணவர் நாள் (12-3-93)

---

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** அவர்கள் (சட்ட அமைச்சர் தமிழக அரசு) ஆற்றிய உரை. (12-3-93)

---

அன்பிற்கும், மரியாதைக்கும், போற்றுதலுக்குமுரிய வள்ளியம்மை கல்வி அறநிலையத்தின் நிறுவனர், தமிழ் அறிஞர் ஐயா பேராசிரியர் அ மு.ப. அவர்களே! வாழ்த்துரை நல்க இருக்கின்ற தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர், அன்பிற்குரிய சகோதரர் ஔவை. நடராசன் அவர்களே! அன்பு சகோதர, சகோதரிகளே! பெரியோர் களே! நண்பர்களே! வணக்கம்.

வெள்ளிவிழா நிகழ்ச்சியில் மூன்றாவது நாளான இன்று விழாவில் பங்கு கொண்டு உரையாற்றும் வாய்ப்பினை ஐயா அவர்கள் எனக்கு நல்கியுள்ளார். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு ஐயா அவர்கள், வரவேற்புரையை மிகச் சுருக்கமாக, தெளிவாக எடுத்துரைத்தார். ஐயா அவர்கள் தமிழ்ப்பற்றும், கல்விப் பணியின் மீது பற்றும், ஈடுபாடும் உடையவர். அவர் மீது எனக்கு மிகுந்த மரியாதையும், அன்பும், நம்பிக்கையும் உண்டு. அதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒன்று, பச்சையப்பன் கல்லூரியில் அவர்களிடத்தில் மாணவனாகப் பயின்றது மற்றொன்று நான் ஏதாவது வேண்டுகோள் விடுத்தால் அதனை ஏற்று அன்போடு நிறைவேற்றி வைப்பார். இன்னும் நாங்களெல்லாம் தமிழ் உணர்வோடு இருக்கின்றோம் என்றால், அதற்குப் பேராசிரியர் மு.வ., அ.மு.ப. போன்ற பெருமக்களே காரணமாவர்.

ஒரு கால் நூற்றாண்டில்—சிறிய அளவில் இக்கல்வி நிறுவனத்தைத் தொடங்கி, வெள்ளிவிழாக் கொண்டாடும் அளவிற்கு வலிமை வாய்ந்த கருவூலமாக மாற்றிய ஐயா அவர்களுக்கு நன்றி கூறும் விழாவாக இந்த வெள்ளிவிழாவை நான் நினைக்கிறேன். கடந்த 25 ஆண்டுகள் ஐயா அவர்கள் செலுத்திய தளரா உழைப்பும், முயற்சியும் இதன் மூலம் நன்கு புலப்படுகிறது. இப்பொழுது இந்நிறுவனம் அறுகு போல் வேரோடி ஆல் போல் தழைத்து இன்று ஒரு நிலைத்த நிறுவனமாக விளங்குகிறது. எனக்கு உடல்நிலை சரியில்லை என்றாலும் ஐயா அவர்கள் மீது நான் கொண்ட அன்பையும், விசுவாசத்தையும் காட்ட இவ்விழாவிற்கு நான் வந்துள்ளேன். சிறந்த நிலையில் விளங்கும் இந்நிறுவனம் சான்றோர்கள் பாராட்டும் அளவிற்கு உயர்ந்து விளங்க வாழ்த்தி, தமிழ் அன்னையை வாழவைக்கும் ஆசானை வணங்கி விடை பெறுகிறேன். வணக்கம்.

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் உயர்திரு. **டாக்டர். ஔவை. நடராசன்** அவர்கள் ஆற்றிய உரை (12-3-93)

---

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களே! பேராசிரியர் பெருங்கடல் அ.மு ப. அவர்களே! திரு. நல்ல தம்பி அவர்களே! திரு. கோ. செல்வம் அவர்களே! நண்பர்களே! அனைவருக்கும் வணக்கம்.

இன்று வள்ளியம்மாள் கல்வி அறத்தின் வெள்ளிவிழாவில் பங்கேற்பதைப் பற்றிப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்; பெரும் பேறாகக் கருதுகிறேன். ஐயா அ.மு ப. அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வந்த போது அங்கு அவர்களிடத்தில் பயின்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்களுள் நானும் ஒருவன். அவர் அந்த நாளிலிருந்தே தம் மாணவர்களுக்கு அன்போடு அறிவுரை நல்கி, அவர்களின் நல்வாழ்விற்கும், உயர் வாழ்விற்கும் மிகப் பெரிய கல்விப் பணியினை ஆற்றி வந்தவர்.

25 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சின்னஞ்சிறு பள்ளியாக 10, 15 குழந்தைகளைக் கொண்டு தொடங்கிய பள்ளியானது மெல்ல மெல்ல வளர்ந்து உயர்நிலைப் பள்ளியாக - பின்பு மேல்நிலைப்பள்ளியாக மாறி, இன்று நெடிதோங்கிய கட்டடங்களைக் கொண்ட மிகச் சிறந்த கல்லூரியாக உயர்ந்து நிற்கிறது. இந்நிலை பெற அ.மு.ப. அவர்கள் எந்த அளவிற்கு அல்லும், பகலும் உழைத்திருப்பார். கால் நோக எத்தனை தடவை நடந்திருப்பார், கை நோக எத்தனைக் கடிதங்கள் எழுதியிருப்பார் என்பதைச் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். தன் தாய் வள்ளியம்மாளின் அரும்புகழைப் பரப்புவதையே குறிக்கோளாகக் கொண்டவர். இத்தகைய சிறந்த கல்வி நிறுவனத்தில்தான், தன் மக்களை நன்மக்களாக, வல்லவர்களாக உருவாக்க முடியும் என்று

பெற்றோர்களும் உறுதியாக எண்ணும்படியான சிறந்த தாய்மைப்பற்றின் தகுதியினைப் பெற்று வள்ளியம்மாள் கல்வி நிறுவனம் ஓங்கி நிற்கிறது. தென்சென்னையில் உள்ளவர்கள் கூட இங்கு வந்து பயிலும் படியான சிறந்த கல்வி நிறுவனமாக விளங்குகிறது.

ஐயா அ.மு.ப, அவர்கள், தாம் ஒருவராகவே நின்று ஆசிரியர்களுக்கு ஆக்கம் தந்து, மாணவர்களுக்கு ஊக்கம் தந்து இன்று வெள்ளிவிழா காணச் செய்துள்ளார். அந்த நாளில் எப்படியிருந்தாரோ அதே போலவே இன்றும் இருக்கிறார் என்று அமைச்சர் பெருமகனார் குறிப்பிட்டது போலவே இன்றும் சிறிதும் அலுப்பும், சலிப்பும் இல்லாமல் இக்கல்வி நிறுவனத்திற்காக உழைத்து வருகிறார்.

ஐயா பேராசிரியராக, இதழாசிரியராக, சமயத்துறையில் ஞானாசிரியராக விளங்கி நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர் களுக்கு வழிகாட்டியாக அமைந்து இம் மாபெரும் கல்வி நிறுவனத்தை நிறுவியுள்ளதைக் காணும் போது என் மனம் நெகிழ்ச்சி அடைகிறது. ஐயா அவர்களே! இந்நிறுவனம் உங்கள் காலத்திலேயே பல்கலைக்கழகமாக வடிவம் பெற வேண்டும் என்று விரும்புகின்றேன். இதை நீங்கள் மிகப் பெரிய செய்தி என்று நினைக்க வேண்டாம். இக் கல்லூரியில், அறிவியல், பொருளியல் மற்றும் மொழியறிவு பற்றிய செய்திகள் அனைத்தும் புகட்டப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் இங்கிருந்த கொடைக்கானல் பல்கலைக் கழகம் மாற்றப்பட்டுள்ளமையால் இந்நிறுவனம் பல்கலைக் கழகமாக வளர்ந்து செழிக்க வாய்ப்புள்ளது.

மாணவர்களே! நீங்கள் எந்த நிறுவனத்தில் பயின்றோம் என்பதை உணர்கின்றபோது நீங்கள் பயின்ற அக் கல்வி

நிறுவனத்தின் இன்றைய பெருமையை, சிறப்பை எப்பொழுதும் உணர்ந்து பார்க்க வேண்டும். நானும் நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றுள்ள அனைவரும் நாங்கள் பயின்ற பச்சையப்பன் கல்லூரியைப் பற்றி என்றும் பெருமையோடு எண்ணிப் பார்ப்போம். 'அர்னால்டு பேராசிரியர் அணி' என்று இங்கிலாந்து நாட்டு மாணவர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வதில் பெருமை கொள்வார்கள். அது போல நீங்களும் 'வள்ளியம்மாள் கல்வி நிறுவனத்தின் மாணவர்கள்' என்று சொல்வதில் பெருமைப்படவேண்டும். அதுதான் உங்களுக்கு எல்லையில்லாப் புகழைத் தேடித் தரும்; துணிவையும், தன்னம்பிக்கையும் ஏற்படுத்தும்.

ஒரு பெண் தன்னந்தனியாகப் பிறந்தவர், விடுதலைப் போராட்டத்திற்காகத் திங்களுக்கு இரண்டு முறை தந்தை சிறையில் இருந்ததால் தந்தையின் அரவணைப்பைப் பெற முடியாதவர், தாய் காசநோயால் அவதிப்பட்டு சுவிட்சர்லாந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்ததால் தாயின் அன்பைப் பெற முடியாதவர். அதனால் இயல்பிலேயே அச்சமும், கூச்ச சுபாவமும் பெற்றிருந்த அந்தப் பெண் கல்கத்தா மகளிர் கல்லூரியில் பயின்ற போது பலரோடும் பழகும் வாய்ப்பினைப் பெற்று, தன் தாயினைக் காண, தனியாகவே சுவிட்சர்லாந்திற்குப் பறந்து செல்லும் துணிவைப் பெற்று, உலகமே புகழும் பாரதப் பிரதமராக அன்னை இந்திராகாந்தியாக உருவாகினார் என்றால் அதற்கு அவர் பயின்ற கல்வி நிறுவனமே காரணமாகும்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அன்னை வள்ளியம்மையின் சிலை திறப்பு விழா நடைபெறப் போகிறது. நீங்கள் அனைவரும் அந்த அம்மையின் வாரிசுகளாக உருவாகிப் புகழ் பெறுவீர்கள் என்பதில் எந்த ஐயமும்

இல்லை. வெள்ளிவிழா காணும் இக்கல்வி நிறுவனம் பொன்விழா முடிவில் ஒரு சிறந்த பல்கலைக்கழகமாக வளர வேண்டும். நீங்கள் தொடும் பொருளெல்லாம் துலங்கும். உங்கள் வாழ்த்துதலில் தான் எங்கள் அனைவரின் வாழ்வும் அடங்கியுள்ளது. உங்கள் தோட்டத்தில் பூத்த ரோசாக்கள் உலக நாடுகள் அளவில் பரவி மணம்கமழும் படியாக அமையும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. நீங்கள் அனைவரும் பல சிறப்புகளைப் பெற்றுத் திகழ வாழ்த்தி விடை பெறுகிறேன். வணக்கம்.

வெள்ளிவிழா மூன்றாவது நாள் (12-3-93) **உயர்திரு. கோ. செல்வம்,** முன்னாள் வானொலி இயக்குநர், நிறுவனர் எழுதிய 'சான்றோர் வாக்கு' என்ற நூலை வெளியிட்டு ஆற்றிய உரை.

---

வெள்ளிவிழாவின் இன்றைய நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குகின்ற மாண்புமிகு அமைச்சர் கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்களே! தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திரு. ஔவை, நடராசன் அவர்களே! தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் உதவி இயக்குநருமான அன்பு நண்பர் நல்லதம்பி அவர்களே! எங்களை உருவாக்கிய ஐயா அ.மு.ப. அவர்களே! நிர்வாகக்குழுத் தலைவர்களே! பேராசிரியர்களே! மாணவ, மாணவியர்களே! வணக்கம்.

நான் ஒரு பெரும் பேற்றினைப் பெற்றுள்ளேன். ஒன்று நான் அ.மு.ப.விடத்தில் பயின்றது. பயின்றது என்றால் அவர்களிடத்தில் பயின்றவர்கள் எல்லாம் உருவாக்கப் பட்டவர்கள் என்பது தான் பொருள். ஏன் என்றால் பச்சையப்பன் கல்லூரியில் நான் பயின்று வந்தபோது, அங்கு பணியாற்றியவர்களில் மூன்று, நான்கு பேரைத்தான் பேராசிரியர்கள் என்று குறிப்பாகச் சொல்லுவார்கள். அவர்களில் ஒருவர் மு.வ. அவர் எல்லாரையும் அன்புடன் 'என்னப்பா!' என்பார்கள். மற்றொருவர் அ.மு.ப. அவர்கள். அவர் 'என்னப்பா! முந்திக்கு இப்போது முன்னேற்றம் உள்ளதா?' என்று அன்புடன் கேட்பார். அன்னார் எழுதிய 'சான்றோர் வாக்கு' என்ற நூலில் மனித வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய எல்லாச் செய்திகளையும் கூறியுள்ளார். அதில் 'சான்றோர் துணை' என்ற கட்டுரையில் வீட்டில் இருக்கும் சான்றோராகிய முதியவரை விடுத்துத் தனிக் குடும்பத்தை அமைத்துக்கொள்ள பிரிந்துசெல்லும் சாராரை அற்புதமாகச் சாடியுள்ளார். 'புகழ்' என்ற கட்டுரையில்,

'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு'

என்ற வள்ளுவரின் குறளில் அமைந்துள்ள நீடுபுகழ் பெறுதற்குரிய வழிகளைப் பற்றிய அற்புதமான விளக்கங்களைத் தந்துள்ளார்.

'சுருங்கச் சொல்லல்' என்பது வானொலியில் அமைந்த ஓர் இலக்கணக் கோட்பாடாகும். ஒரு கருத்தை ஐந்தே மணித்துளிகளில் செறிவாகவும் சுருக்கமாகவும் கேட்பவர் மனத்தில் பதியுமாறு எடுத்துரைக்க வேண்டும். அவ்வகையில் 'சான்றோர் வாக்கு' என்ற இந்நூலில் அமைந்துள்ள கருத்துக்கள் அனைத்தும் மிகச் செறிவாக அமைந்துள்ளன.

ஐயா அவர்கள் எந்த ஒரு கருத்தையும் மனத்தில் பதியுமாறு சொல்லுவதில் வல்லவர். 40 ஆண்டுகளுக்கு முன்பு ஐயா அவர்களிடத்தில் 'நன்னூல்' என்ற இலக்கண நூலை இரண்டு முறை படித்தவன். அவர் கற்றுக்கொடுத்த காண்டிகையுரை — விருத்தியுரை இன்னும் என் மனத்தில் அப்படியே பதிந்துள்ளது. அத்தகைய சிறந்த ஆற்றல் உடையவர் அவர்.

பொதுவாக ஆனர்ஸ் படிப்பவர்களுக்கு ஆங்கிலம் படிப்பதில் சற்று ஆர்வம் குறைவாக இருக்கும். அதற்கு நானும் விதிவிலக்கு அல்லன். ஆனால் எனக்கு ஆர்வத்தையும், முழு ஊக்கத்தையும் ஏற்படுத்தியவர் ஐயா அவர்களே ஆவார். அத்தகைய சிறந்த ஆசான் எண்ணற்ற நூல்களை இயற்றியுள்ளார். அவருடைய மாணவனாகிய நான் இன்று, அவர் எழுதிய 'சான்றோர் வாக்கு' என்ற நூலை வெளியீடு செய்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நூலில் அமைந்துள்ள 'பயனில சொல்லாமை' என்ற கட்டுரையைப் படிக்கும் போது 'Practical way of life'

என்பது பற்றி நினைவுக்கு வருகிறது. அதாவது ஒருவன் இரவு உறங்கச் செல்லும் போது உறங்குவதற்கு முன்பு இன்று வரை தான் செய்த தவறுகளை எண்ணிப் பார்த்து, நாளை காலை முதல் நல்லவனாய் செயல்பட வேண்டும் என்று முடிவு செய்து அதன்படி செயல்படுவானானால் வாழ்க்கையில் நன்னிலை அடையலாம் என்பதை நான் இங்கு எடுத்துக் காட்ட விழைகிறேன்.

ஐயாவுடைய இந்நூலைப் படித்தோம் என்றால் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை பதினெண்கீழ்க்கணக்கு என்று எல்லா நூல்களின் கருத்துக்களையும் கோடிட்டுக் காட்டி யுள்ளதைப் பார்க்கும்போது அவருடைய நுண்ணறிவு நன்கு புலப்படும். அவர் எங்களுக்குக் கல்லூரியில் பாடம் பயிற்று விக்கும்போது ஒரு வகுப்பிலேயே குறைந்தது 30 மேற்கோள் களாவது எடுததுக் காட்டிக் கருத்துக்களை விளக்குவார். இததகைய சிறப்புடைய ஐயா அவர்கள், மகளிர் கல்லூரி ஒன்றை உருவாக்கி, பெண்கள் அறிவு பரந்து பட்டதாக அமையப் பாடுபட்டு வருகிறார். ஐயா தொட்டது எல்லாம் துலங்கும். இங்கு எனக்கு முன்பு பேசிய துணைவேந்தர் வெள்ளிவிழாக் காணும் இக்கல்வி அறம் ஒரு சிறந்த பல்கலைக் கழகமாக ஆகட்டும என்று வாழ்த்தினார். ஆனால் நான் அப் பல்கலைக்கழகத்தை வளர்க்க ஐயா அவர்களை நீணட நெடுங்காலம் நலத்தோடும், வளத்தோடும் வாழட்டும் என்று இறைவனை வேண்டி என் உரையை முடித்துக் கொள் கிறேன், ஆசானுக்கு வணக்கங்கள்! நன்றி. வணக்கம்!

**உயர்திரு. வெ நல்லதம்பி அவர்கள் (உதவி இயக்குநர், சென்னைத் தொலைக்காட்சி) முதற் படியினைப் பெற்றுக் கொண்டு ஆற்றிய உரை. (12-3-93)**

---

மாண்புமிகு அமைச்சர் அவர்களே! உயர்திரு. கோ. செல்வம் அவர்களே! துணைவேந்தர் அவர்களே! மதிப்பிற் குரிய ஐயா நிறுவனர் அவர்களே! பெரியோர்களே! மாணவச் செல்வங்களே! வணக்கம்.

இன்று என் வாழ்க்கையின் ஒரு பொன்னாள் என்று கருது கிறேன். வெள்ளி விழா காணும் இக்கல்வி அறத்தின் நிறுவனர், என் பேராசிரியர் எழுதிய 'சான்றோர் வாக்கு' என்ற நூலின் முதல் பிரதியைப் பெறுவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். 1970களில் மூன்று ஆண்டுகள் ஐயா அவர்களின் விரிவுரைகளைக் கேட்டவன் நான். இவருடைய அரும்பெரும் உரைகளை வானொலியில் ஒலிபரப்பி, இப்பொழுது அதனைத் தொகுத்து நூலாக அமைத்து அதன் முதல் பிரதியைப் பெறும் வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். முன்பு பேசியவர் களெல்லாம் தங்களுக்கும், ஐயா அவர்களுக்கும் உள்ள உறவு முறை பற்றிப் பேசினர். நான் இருவகையில் உறவு முறை உடையவன். ஒன்று நான் ஐயா அவர்களின் மாணவன். இரண்டு அவருடைய மகன், என் வகுப்பறைத் தோழன். நாங்கள் இருவரும் பக்கத்தில் பக்கத்தில் அமர்ந்து ஐயா அவர்களின் உரையைக் கேட்கும் பேறு பெற்றவர்கள்.

இப்பொழுது நான் ஒரே ஒரு கருத்தை மட்டும் கூற விழைகிறேன். வானொலியும், தொலைக்காட்சியும் மொழியை முதலாக வைத்து நடத்தி வரும் நிறுவனங் களாகும். ஐயா அவர்களும் மொழியை முதலாக வைத்து இந்நிறுவனத்தை நடத்தி வருகின்றவர். ஐயா அவர்கள் என்னிடத்தில் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார். அதாவது சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பிருந்த மொழி வளமோ,

மொழி உச்சரிப்போ இப்பொழுது இல்லையே என்று வருத்தப் பட்டார். இதே குறையைச் சுட்டிக்காட்டிப் பல இடங்களி லிருந்தும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இக்குறையை எம் நிலையங்கள், ஐயா நிறுவியுள்ளது போன்ற கல்வி நிலையங்கள் முயற்சி செய்து நிவர்த்தி செய்யலாம்.

நூலைப் பற்றி ஒரு கருத்தைக் கூற விழைகிறேன். அமெரிக்கா போன்ற வெளி நாடுகளில் சான்றோர் வாக்கு களையெல்லாம் தொகுத்து நூலாக வெளியிட அந்நிறுவனங் களே பாடுபடும். நானும் அங்கிருந்து பாடுபட்டவன். அத்தகைய வசதிகள், நிறுவனங்கள் இங்கு இல்லை. 15 ஆண்டுகளுக்கு முன்பு வானொலியில் நான் பணியாற்றி வந்த போதும் இல்லை. இப்பொழுது ஒருவேளை இத்தகைய வசதிகள் ஏற்பட்டிருக்கலாம். இங்குள்ள சான்றோர்களின் உரை காற்றோடு காற்றாக கலந்து போகாத வண்ணம் நாமும் சிறந்த நிறுவனங்களை ஏற்படுத்திச் செயலாற்ற வேண்டும். அவ்வகையில் ஐயா அவர்கள் செய்த தொண்டு மாபெருந்தொண்டாகும். இது தமிழ் உலகத்திற்கு ஒருபெரும் பேறாகும். இதுபோல இன்னும் தமிழ்மொழியில் வர வேண்டும் என்று கூறி என் ஆசான் முன்பு எப்படி என்னை வாழ்த்தினாரோ அப்படியே இப்பொழுதும் வாழ்த்தும்படி வேண்டி என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்!

# வெள்ளிவிழா நான்காம் நாள் - ஆசிரியர் நாள - [13-3-93]

தமிழக கல்வி அமைச்சர் **மாண்புமிகு செ. அரங்கநாயகம்** அவர்கள் ஆசிரியர் நாளில் ஆற்றிய உரை (13-3-93)

வள்ளியம்மாள் கல்வி அறக்கட்டளையின் தலைவர் அ.மு. பரமசிவானந்தம் அவர்களே, கல்வித்துறைச் செயலர் சங்கரசுப்பையன் அவர்களே, சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளர் டாக்டர் கோவிந்தராஜுலு அவர்களே, கல்லூரித் தலைவர் அவர்களே, தலைமை ஆசிரியர்களே, பேராசிரியர்களே, ஆசிரியர்களே, பெற்றோர்களே அன்பு மாணவ நண்பர்களே உங்கள் அனைவருக்கும் என் வணக்கம்.

வள்ளியம்மாள் கல்வி அறக்கட்டளையின் சார்பில் கல்விப்பணி கடந்த 25 ஆண்டுக் காலமாக சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நடைபெறுகின்றது. இந்த அறக்கட்டளையின் சார்பில் நடைபெற்றுவரும் கல்வி நிறுவன வெள்ளிவிழா நிகழ்ச்சியில் நான் அவரோடு வந்து கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். பேராசிரியர் அ. மு. ப. கல்வித் துறையில் அனுபவமும்; ஆர்வமும் கொண்டவர். அவரது தலைமையில் ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளை ஆயிரக்கணக்கான குழந்தைகளின் கல்வி நலனுக்காக நடைபெறுகின்றது. ஐயா அவர்களுக்கு இச்சமுதாயம் நன்றிக் கடன்பட்டுள்ளது. என்பதில் சந்தேகம் இல்லை, அவர்கள் நீண்டநாள் வாழ்ந்து இந்த அறக்கட்டளையின் கல்விப்பணி மேலும் சிறக்க, திட்டம் பல நிறைவேற்ற வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன். இப்போது கல்வி நிறுவனங்கள் தனியார் முறையில் இயங்கி வருகின்றன. அரசாங்கம்தான் கல்வியைத் தர வேண்டும் என்றாலும் இரண்டு காரணத்தால் அரசாங்கமானது முழுமையாக கல்வி தரும் பொறுப்பை ஏற்றுச் செயல்படுத்த முடிவதில்லை. மேலும் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லை. எல்லாக் குழந்தைகளுக்கும் முழுமையாக கல்வியைத் தரமுடியாத போது, தனிப்பட்டவர்களும்

ஏற்படுத்தக் கூடாது என்று செயல்படுத்தினால், பெரும் பாலான குழந்தைகள் கல்வியைப் பெறமுடியாது. 1993-இல் இன்றைய மக்கள் தொகையின்படி அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. கி. பி. 2020இல் மக்கட் தொகை இரண்டு மடங்கு ஆகும். அப்போது அன்றைய தேவையை அரசாங்கத்தால் பூர்த்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கையை இன்றைய தினம் நம்மால் கொள்ள முடியவில்லை. இதை மனத்தில் வைத்துப் பார்க்கும் போது. சென்னை மாநகரத்தில் கூட இன்றைக்கு உள்ள பள்ளிக்கூடம் கல்லூரியைப் போல இரண்டு மடங்கு தேவை என்பதைப் பற்றிப் பேசுகிறோம். 2000 என்பது வெகு தூரத்தில் இல்லை, ஆகவே தேவைக்கு ஏற்ப கல்வி நிறுவனம் ஏற்படவும் குழந்தைகளுக்குக் கல்வி கிடைக்கவும். அரசாங்கத் தினாலேயே முடியாதபோது தனியார் அந்தப் பொறுப்பை ஏற்க முன்வரும் இந்நேரத்தில் ஆதரவு தருவதும், பரிவு கொள்வதும் அரசாங்கத்தின் கடமையாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் பல்வேறு அறக்கட் டளைகளைக் கல்வி நிறுவனங்கள் தொடங்கும் இந்நேரத்தில் நாம் முறையாக பரிசீலனை செய்து அவர்களுக்கு உரிய அனுமதி தந்து வருகின்றோம். இரண்டாவது காரணம் பக்கத்திலேயே அரசு பார்வையில் நடைபெறும் கல்வி நிறுவனம் இருந்தாலும், பெற்றோர்கள், தனியார் பொறுப்பில் உள்ள பள்ளிகளில் சேர்க்க விரும்புகின்றார்கள். ஏனெனில் தரமான கல்வியைத் தனியார் கல்வி நிறுவனத்தால் தர முடியும் என்ற நம்பிக்கை பொதுமக்களிடத்தில் ஏற்பட்டு இருக்கின்றது. அதிலே ஓரளவிற்கு உண்மையும் இருக்கின்றது. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் தனியார் துறையில் நிறையக் கல்வி நிறுவனங்கள் தொடங்க வேண்டிய அவசியம் இந்நிலையில் நிறைய இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். குழந்தைகளுக்குக் கல்வியைத்

தருவதால் அவர்களுடைய அறிவும் ஆற்றலும் வளர்ச்சி அடைவதோடு, அவர்களுக்கு ஒழுக்கத்தையும் கற்பிக்கின்றது, அவர்கள் படித்து, பெரியவர்கள் ஆனவுடன் குடும்பத்திற்கு மட்டுமல்லாது சமுதாயத்திற்கும் பயன்படுகின்ற தேச பக்தி உணர்வுள்ளவர்களாக உருவாக்குவதுதான் கல்வி நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகவும் இருந்து வருகிறது. நாம் பல்வேறு முன்னேற்றங்களை அடைய வேண்டும் என்று வருகிறபோது அதற்கு மனிதசக்தி எந்த அளவிற்குப் பயன் படுகிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்கும்போது குழந்தை களின் அறிவு, ஆற்றல், வளர்ச்சி எல்லாம் நமக்கு மிகவும் பயன்படும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஒவ்வொரு குழந்தையும் நல்ல முறையில் படிக்கலாம், முன்னேறலாம் என்ற நிலையில் குழந்தைகள் பள்ளிக்கு வருவதும், ஆசிரியர் சொல்லித் தருவதுமான நிலைகள் இன்று இருக்கின்றன.

ஒவ்வொரு வகுப்பில் 30 பேர் படிக்கின்றபோது அதில் 20 பேர் தேறிவிட்டனர் என்பதைவிட 10 பேர் ஏன் தேற வில்லை என்பதை ஆசிரியர்கள் சிந்தித்துப் பார்த்து, தேற்றும் கடமையை மேற்கொள்ள வேண்டும்.

குழந்தையின் வெற்றி தோல்விக்குக் குழந்தைகள் காரணம் அல்ல. ஆசிரியர்கள்தான் காரணம். ஆகவே பொறுப்பை ஏற்றுக் கொண்டு கடமையை உணர்ந்து, வகுப்பில் குழந்தை யின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் எல்லாக் குழந்தைகளும் வெற்றியைப் பெற முடியும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். அறிவுத்துறையில் சேதாரம் ஏற்படாத வகையில் எந்த ஒரு குழந்தையின் அறிவும் ஆற்றலும் வீணாய்ப் போகாமல், அவர்களை நாட்டுக்குப் பயன்படுத்துமாறு செய்கின்ற ஆக்கப்பூர்வமான ஒரு புனிதக் கடமையைத்தான் கல்வித் துறை சம்பந்தப்பட்டவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற உணர்வோடு, தமிழக அரசானது மாண்புமிகு.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையில் இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதற்குத் தேவையான பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது என்பதைச் சொல்லி உங்கள் கல்வி அறக்கட்டளை நிறுவனத்தில் படிக்கும் குழந்தைகள் எல்லாம் வாழ்க்கையில் மிகப் பெரிய நிலையை அடைய என் மனமார்ந்த வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொண்டு அதற்குப் பாடுபட்டு வரும் ஆசிரியப் பெருமக்களையும் வாழ்த்தி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**தமிழக அரசு, கல்வித்துறைச் சிறப்பாணையர் மற்றும் செயலர் உயர்திரு. வி. சங்கரசுப்பையன் அவர்கள் வெள்ளி விழாவையொட்டி நடைபெற்ற ஆசிரியர் நாளில் ஆற்றிய உரை. (13-3-93)**

---

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களே, கல்வி நிறுவனர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய அ. மு. பரமசிவானந்தம் அவர்களே; சென்னைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அவர்களே, மற்றும் பெரியோர்களே, மாணவ, மாணவிகளே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கம். வள்ளியம்மாள் அறக்கட்டளையின் 25வது ஆண்டுப் பணி சிறப்பு விழாவிற்கும், 'நல்லவை ஆற்றுமின்' என்ற புத்தகத்தை வெளியிடுவதற்கும் வாய்ப்பும் அளித்தமைக்கு அறக்கட்டளை நிறுவனருக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிறுவனம் முதலில் 5 மாணவர்களை வைத்து ஓர் நர்சரிபள்ளியாக ஆரம்பித்து இந்த அண்ணா நகரில் மிகப் பெரிய அளவில் உயர்நிலைப் பள்ளியும் கல்லூரி அளவிலும் முக்கியம் வாய்ந்த கல்வி நிறுவனமாக வளர்ந்துள்ளது. அ.மு. பரமசிவானந்தம் அவர்களுடைய சொந்த முயற்சியும் உழைப்பும், எல்லாவற்றிற்கும் மேலாக அவரது அனுபவமும், வயது முதிர்ந்தாலும் அதை இளமையாகச் செயல்படுத்துகின்ற ஆர்வமும் ஒரு காரணமாகும். இந்த வட்டாரத்தில் உள்ள மாணவிகளுக்கு மிகச் சிறந்த கல்லூரி என்ற அளவில் இக்கல்லூரி விளங்குகிறது. 87-88ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ்நாட்டில் புதிதாக கல்லூரி அமைக்கப்படவில்லை, நிதி அமைச்சர் அவர்கள் கூறியது போல நிதி நிலைமைக்கு ஏற்ப ஆரம்பப் பள்ளிக் கூடங்கள், உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த அளவில் தனிப்பட்ட நிறுவனங்கள் எல்லாம் இம்மாதிரி கல்வி நிறுவனங்களை ஆரம்பித்து நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

சாதாரணமாக மாணவ, மாணவிகளைப் பள்ளிகளில் சேர்ப்பது என்றால் பெற்றோர்கள் கல்விக்கூடம் எப்படி நடைபெறுகின்றது; எப்படி ஆசிரியர் சொல்லிக் கொடுக்கிறார்கள் என ஆராய்ந்து சேர்க்கின்றனர். அந்த அளவில் அந்த நிறுவனம் நடந்து வருவதோடு பெற்றோர் ஆதரவும் கிடைத்துள்ளது நல்ல கல்வி நிறுவனம் எல்லாம் முக்கியமாக நிர்வாகம், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என நான்கு நிலைகளும் நல்ல முறையிலே சேர்ந்து இணைந்து செய்யப்பட்டால் நிறுவனம் மிகமிக நன்றாக இருக்கும். இவ்வாறு நிறுவனங்களும், ஆசிரியர்களும். பெற்றோர்களும் மாணவர்களின் நலனுக்காகப் பாடுபடுகின்றனர். இந்த நான்கும் இணையும் போது தரமான கல்வியைக் கொடுக்க முடியும். அவ்வகையில் இந்நிறுவனம் செயல்படுகிறது. என்பதையும் என்னுடைய பாராட்டுகளைப் பரம சிவானந்தம் ஐயா அவர்களுக்கும் நிறுவன ஆசிரியர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் அ.மு.ப. அவர்கள் எழுதிய ''நல்லவை ஆற்றுமின்'' என்ற புத்தகத்தை வெளியிடும் வாய்ப்பும் கொடுத்துள்ளனர். இதில் அவரது பல்வேறு கட்டுரைகள், வானொலியில் கொடுக்கப்பட்டவைகளோடு எல்லாம் இணைத்துப் புத்தகமாக வெளியிட்டுள்ளனர். மிகப்பயனுள்ள, மாணவர்கள் கடைபிடிக்க வேண்டிய நூலாகும். அதே போல விஞ்ஞான உலகத்திலே வரும்போது பல்வேறு புரட்சிகரமான சமூகத்திற்கு வேண்டப்படாத நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றைப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே இருந்த தமிழ்ப் புலவர்களின் கருத்துக்களை எல்லாம் கொண்டு,

''நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்''

என்ற கருத்தினை அடிப்படையாகச் சொல்லி விளக்கி இருக்கின்றார்கள். மாணவர்களாயினும், பெரியவர்களாயினும், எல்லா நிலைக்கும் இக்கருத்து உதவும். தீமை செய்வதை விட்டுவிட வேண்டும். சாதாரணமாக மனிதருக்கு உள்ள அத்தனை உறுப்புகளும் விலங்குகளுக்கும் உண்டு. மேலும், நமக்குக் கொடுக்கப்படும் மருந்துகள் விலங்கினங்களுக்கும் கொடுக்கின்றனர் எனினும், பகுத்தறிவு என்ற ஆறாவது அறிவைப் படைத்தவன் என்று ஒரு வேறுபாட்டினால் மனிதன் விலங்கினிடமிருந்து வேறுபடுகிறான். 'நல்லவை எவை கெட்டவை எவை' என அறிந்து கொள்ள முடிகிறது.

இந்தப் புத்தகத்தில் நல்ல பல கருத்துக்களைத் தொகுத்துள்ளதோடு அதனை வெளியிடும் வாய்ப்பினை எனக்கு அளித்தமைக்கு நன்றி கூறி அண்ணாநகர் பகுதியிலேயே இந்த நிறுவனம் தழைத்தோங்கி பெரிய தொண்டினை ஆற்றி வருகின்ற ஐயா அவர்களுக்கு எனது பாராட்டினைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளர் **டாக்டர் பி. கோவிந்தராஜுலு** அவர்கள்வெள்ளி விழாவையொட்டி நடைபெற்ற ஆசிரியர் நாளில் ஆற்றிய உரை (31-3-93)

---

நமது பெருமதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரிய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களே, நமது பெருமைக்கு உரிய கல்வித் துறைச் செயலர் அவர்களே, தமிழ்த் தந்தை திரு அ.மு. பரம சிவானந்தம் அவர்களே, முதல்வர்களே, ஆசிரியப் பெரு மக்களே, சான்றோர்களே, தாய்மார்களே, நல்ல மாணவ மணிகளே, அனவருக்கும் என்னுடைய அன்பான வணக்கங்கள்.

இந்த ஆசிரியர் திருநாளில் என்னை வரவழைத்து உரை ஆற்றுமாறு வாய்ப்பளித்தமைக்கு நன்றி செலுத்துவதற்கு உரிய கடமைப்பட்டுள்ளேன்.

திரு. அ.மு.ப. அவர்கள் 50 ஆண்டுகள் கல்வித் தொண் டாற்றி இணையற்ற ஒரு செயலைச் செய்து வரும் தமிழ்ச் சான்றோர் என்று கூறினால் மிகையாகாது. அவர் பலவற்றைத் தன் கனவாக வைத்துக் கொண்டு அது நனவாகும் போது எண்ணி மகிழ்ந்து தன் தாயின் வாயிலாக உணர்ந்து, அந்தத் தாய்க்கு மதிப்பு செய்யும் வகையில் ஒரு சிறு தொடக்கப்பள்ளியாக ஆரம்பித்து; அதை ஓர் உயர் நிலைப்பள்ளியாகவும் மற்றும் பெரிய கடல் அலை போல கல்லூரியாகவும் உருவாக்கி உள்ளார் எனில் அது மிகப்பெரிய சாதனையாகும், அதுவும். பெண்களுக்கு எனக் கல்லூரியை ஏற்படுத்தியுள்ளமையைக் காணும்போது, பெண்ணிற்குக் கல்வி எவ்வளவு அவசியம் என்று தெரிகிறது.

இப்பேரறிஞர் அவர்கள் ''தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்பதை மனத்தில் கொண்டு தமிழ் அறிஞர் களால் பாடப்பட்ட நூல்கள், அவர்கள் கொள்கையளவில் தெரிந்து கொண்ட நற்பயன்கள், ஏடுகளின் வாயிலாக அறிந்த

கருத்துக்கள் ஆகியவற்றைப் புத்தக வடிவிலே ஏற்படுத்தி நமக்கு விருந்தாகப் படைத்திருக்கிறார். அத்தகையதொரு விருந்தினை இந்த ஆசிரியத் திருநாளில் ''நல்லவை ஆற்றுமின்'' என்ற நூலை வெளியிட்டு, அதன் முதல் பிரதியை எனக்குக் கொடுத்துள்ளமையை எண்ணும்போது நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நூலிலே, ஆசிரியர்களை மாணவர்கள் ஓர் எடுத்துக் காட்டாகப் பார்க்கின்றனர். மாதா, பிதா, குரு தெய்வம் என் கிறார்களே அதாவது கடவுளுக்கும், தாய் தந்தைக்கும் அடுத்தபடியாக ஒரு உன்னத ஸ்தானத்திலே ஆசிரியர்களை வைத்து விளக்குகின்றார். ஆசிரியர்கள் நற்பண்புகளோடு விளங்க வேண்டும், சிறந்த கல்வி அறிஞர்களாக வரவேண்டும் என்றும் ஒழுக்க நெறிமுறைகளை உடையவர்களாகத் திகழ வேண்டும் என எடுத்துரைக்கின்றார்.

பள்ளி அல்லது கல்லூரியில் எந்தப் பாடத்தினை நடத்துகிறார்களோ, அதில் மிகவும் புலமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். அத்தகைய ஆசிரியர்கள் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது மாணவர்கள் தங்களை மறந்து ஆசிரியர் முகத்தைப் பார்த்துக் கொண்டு செவிகளால் இன்பத்தைப் பருகுகின்றார்கள். அத்தகைய ஆசிரியர்களைக் காண்பது மிக அரிதாக உள்ளது என்ற காரணத்தினால் இவரது ''நல்லவை ஆற்றுமின்'' என்ற நூலை வெளியிட்டாரோ என்று கருதத் தோன்றுகிறது. நல்ல செயல்களைச் செய்யாவிடினும், தீய செயல்களைச் செய்யாமல் இருப்பது நன்மை பயக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு ஆசிரியர்கள் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டிய கருத்துக்களை எடுத்துச் சொல்லி மாணவர்கள் தங்களைப் பின்பற்றி நடக்குமாறு செய்தால் அவர்களும்

ஒழுக்க நெறியுடன் இருப்பார்கள் என்றுரைத்துள்ளார். ஆசிரியர் என்றால், தனித்தன்மை வாய்ந்தவராக, பெருமை மிக்க பண்டிதர் என்ற முறையில் நம்மை ஆளாக்கிக் கொண்டு வருங்கால சந்ததிகளை வழிநடத்திச் செல்ல வேண்டும். தற்போது, நமது நாட்டில் சகிப்புத் தன்மை இல்லாமல் இருந்து வருகிறது. காரணம், ஒழுக்க நெறிமுறைகளில் ஏற்படும் குறைபாடே ஆகும். ஆகவே ஒழுக்க நெறிகளை வலியுறுத்தும் நோக்கமாக இப்புத்தகத்திலே சான்றோர்களின் வாக்குகளையும், மதக்கோட்பாடுகளையும், பெரியவர்களின் சான்றுகளையும் மிக எளிய முறையில் பகுத்து, புத்தக வடிவில் வெளிக் கொண்டு வந்து, எல்லாருக்கும் பயன்படும் வகையில் தமிழ்ப் பணியாற்றியுள்ள ஐயா அவர்களை நான் மனமாரப் பாராட்டி வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

# வெள்ளிவிழா ஐந்தாம்நாள் (ஞாயிறு)
# 14-3-93—பட்டமளிப்புவிழா

---

**14-3-93** அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் வருமான வரித்துறைத் தலைவர், **உயர்திரு வி. எம். சிவசுப்பிரமணியம்** அவர்கள் ஆற்றிய உரை.

---

மாண்புமிகு தொழில்துறை இணை அமைச்சர் அவர்களே! வள்ளியம்மை கல்வி அறத்தின் நிறுவனர், ஐயா, அ. மு. பரமசிவானந்தம் அவர்களே! மற்றும் இங்குக் கூடியுள்ள தாய்மார்களே! மாணவ, மாணவியர்களே அனைவருக்கும் முதற்கண் என்னுடைய பணிவான வணக்கம். நான் வடஇந்தியாவில் பணிபுரிந்த காரணத்தால் அதிகமாகத் தமிழில் எனக்குப் பேசத் தெரியாது. எனவே எனக்குத் தெரிந்த ஓரிரு கருத்துக்களை மட்டும் உங்களுக்கு எடுத்துக் கூற முற்படுகின்றேன். இன்று ஏறக்குறைய நூறு மாணவிகள் பட்டம் பெற்று வாழ்வின் அடுத்த கட்டத்திற்குச் செல்ல இருக்கின்றார்கள். அவர்களுக்குக் கருத்துரையும், நல்லுரையும் வழங்கப் பெரியோர்கள் உள்ளனர். எனினும் எனக்குத் தெரிந்த அறிவுரைகளைக் கூற விரும்புகின்றேன்.

இன்று நாம் செய்தித்தாளைப் பிரித்துப் பார்த்தோமானால், இந்தியா, அயர்லாந்து, லெபனான் என்று எந்த நாட்டினை எடுத்துக் கொண்டாலும் வன்முறைகள். வன்முறைகள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. இதே வன்முறை முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இல்லை என்பதையும் நாம் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன என்று பார்க்கும்போது ஓர் உதாரணத்தை இங்குக் கூற விரும்புகிறேன். 1969இல் பம்பாய்க்கு வருமானவரி அதிகாரியாகச் சென்றபோது, அங்கு என்னுடைய சிறுவன் முதல் வகுப்பில் சேர்ந்தான், அங்கு, வாரத்திற்கு ஒரு கட்டுரையாக எழுதி

அடுத்த வாரத்திற்குள் மனப்பாடம் செய்யுமாறு கூறுவார்கள்.

முதல் வாரம் கிறித்துவர்களின் கொண்டாட்டம் பற்றிய கட்டுரையை எழுதச் சொன்னார்கள். அடுத்த வாரம் முகமதியர்கள் கொண்டாடும் "ஈத்" விழாவைப் பற்றிய கட்டுரை, அடுத்தது 'தீபாவளி' விழா, என்று ஒவ்வொரு மதத்தைச் சார்ந்த கட்டுரையைக் கொடுத்து மாணவர் களுக்கு ஏற்றத்தாழ்வில்லா ஒரு நிலையை, மதவேறு பாட்டினைத் தவிர்க்கும் நோக்கத்துடன் எழுத வைத்தார் கள். ஐந்தாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை இம்முறை இருந்து வந்தது. இவ்வகையில் பம்பாயில் உள்ள ஒற்றுமை வேறு எங்கும் வராது. இதே போல நம் நாட்டிலும் மதத்தொடர்பான வகுப்புகள் பல ஏற்படுத்தி மாணவர் களுக்கு உரிய கல்வி கொடுக்கப்பட வேண்டும்.

இப்போது நம்முடைய நாட்டில் பக்தியோடு ஈடுபட்டு வரும் ஐயப்பன் கோவிலுக்குச் செல்லுபவர்கள் முதலில் அவ்விடத்தில் உள்ள மசூதிக்குச் சென்று வழிபாடு செய்து திருநீறு பெற்ற பின்னரே செல்கின்றனர். இம்மாதிரி இணைந்து நடைபெறும் இப்பூசைகளில் ஈடுபடுபவர்கள் கூட தற்போது மதக்கலவரத்தில் ஈடுபட்டு, தேசவிரோத சக்தி களுக்குத் துணை புரிகின்றனர். ஆகவே, நாம் சிறு வயதிலி ருந்தே மாணவர்களுக்குக் கல்வியின் மூலம் மத ஒற்றுமையைப் புகட்ட வேண்டும்.

அடுத்தது நான் வருமான வரித்துறை அதிகாரி என்ற வகையில், நம் நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றிக் கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன். நாம் இன்று வெளி நாட்டோடு போட்டிப்போட வேண்டிய அவசியம் ஏற்பட் டுள்ளது. படித்துப் பட்டம் பெற்றால் மட்டும் போதாது, திறமை பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். அப்போது

தான் நிலையான வேலைக்குத் தகுதியுடையவர்களாக ஆக முடியும். ஆகவே நாம் நம் திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். முன்பெல்லாம் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வு களில் அனைத்திந்திய அளவில் ஆயிரம் பேர்கள் தேர்வில் வெற்றி பெறுகிறார்கள் என்றால் அதில் நூறு பேராவது தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள். ஆனால் இன்று பத்து பேர்கூடத் தமிழ்நாட்டைச் சார்ந்தவராக இல்லை. அதற்குக் காரணம் கல்வித்தரம் குறைவதே ஆகும்.

தமிழகத்தில் பட்டப்படிப்பிற்காக நடத்தப்படும் பாடங்கள் பம்பாய் போன்ற நகரங்களில் பதினோராம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்புகளுக்குப் பாடத்திட்டமாக வைத்திருக்கிறார்கள். ஆகவே இன்று போட்டிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் நம்முடைய கல்வி நிலையை உயர்த்துவதில் கவனமாக இருக்க வேண்டும். கல்லூரிப் படிப்பைப் பொருத்த மட்டில் பல மாறுதல்களை நாளுக்கு நாள் ஏற்படுத்திக் கொண்டே இருக்கவேண்டும். இவற்றில் கவனம் செலுத்தவில்லையானால் நம்முடைய கல்வி நிலை மிகவும் பின்தங்கி விடக்கூடும்.

உதாரணமாக, பொறியியல் கல்வித்துறை தற்போது நான்கு வருடங்களில் படித்து முடிக்க வேண்டும், என்ற நிலை உள்ளது. அதில் பயிலுகின்ற மாணவர்கள் சிலர் திறமை மிக்கவர்களாக இருப்பதனால் இரண்டே ஆண்டுகளில் கூட முடித்துவிடுகின்றனர். அப்படிப்பட்ட மாணவர்களோடு போட்டியிடும் அளவிற்கு நம் கல்வித்துறை வளர வேண்டும், பட்டம் பெற்ற ஒவ்வொரு மாணவியும் இதை மனத்தில் கொண்டு தத்தம் குடும்பத்திற்கும், நாட்டிற்கும் உரிய பணிகளைச் செவ்வனே செய்து வாழ்வில் வளம் பெற வேண்டும் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

பட்டமளிப்புவிழாவில் தொழில்துறை இணை அமைச்சர், **மாண்புமிகு எம். அருணாசலம்** அவர்கள் பட்டம் அளித்து ஆற்றிய உரை. (14-3-93)

---

மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய கல்லூரி நிறுவனர் உயர்திரு, பெரியவர் பரமசிவானந்தம் அவர்களே! எனக்கு முன்னால் உரை நிகழ்த்தி அமர்ந்திருக்கின்ற முதன்மை வருமானவரி ஆணையாளர் உயர்திரு. சிவசுப்பிரமணியம் அவர்களே! கல்லூரி முதல்வர் அவர்களே! கல்லூரித் தாளாளர் உயர்திரு. மெய்கண்டான் அவர்களே! மாணவ மாணவிகளே! பெரியோர்களே! உங்கள் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று நடைபெறுகின்ற இப்பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டதில் மகிழ்ச்சி அடைகின்றேன். எனக்குப் பின்னால் திருமுருகக் கிருபானந்தவாரியார் அவர்கள் அருளுரை வழங்க இருக்கின்றார்கள். இதற்கிடையில் என்னுடைய கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். பட்டமளிப்புவிழா என்பது கல்லூரியிலே மூன்று ஆண்டுகள் கழித்து, புது வாழ்க்கையிலே காலடி வைப்பதற்கான அடிகால் என்று கருதுகின்றேன்.

இனி மேலே என்ன செய்யப்போகிறோம் என்று எண்ணுகின்ற நாள். ஒரு நாட்டினுடைய வரலாற்றினைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அந்த நாட்டிலுள்ள நூலகத்திற்குச் செல்ல வேண்டும். அங்குப் போய் புத்தகங்களைப் பார்த்தாலே நாட்டினுடைய வரலாறு புரிந்துவிடும்.

இன்றைய இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி ஆகியவை எந்நிலையில் உள்ளன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், இன்றைய பெண்கள்-இளைய தலைமுறையினர் எதை விரும்புகின்றார்களோ

அதைப் பெறுகின்றார்களா என்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம். நாட்டினுடைய எதிர்காலத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால் இது போன்ற சிறந்த கல்விநிறுவனங்களில் பயில்கின்ற உங்கள் முகத்தைப் பார்க்கும் போது அறியலாம். எதிர்கால இந்தியா எப்படி இருக்கும் என்றும் அறிந்து கொள்ள முடியும்.

எதிர்கால இந்தியாவை—நல்ல இந்தியாவை—ஒற்றுமை மிக்க இந்தியாவை—சாதிசமயப் பேதமற்ற இந்தியாவைப் படைப்பதற்குக் காத்திருக்கிறது என்பதை உங்கள் முகங்களைப் பார்க்கும்போது, என்னால் காண முடிகிறது. பாரதிகண்ட புதுமைப் பெண்ணாக, இக்கல்லூரியை விட்டு வரவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

கடந்த நாற்பது ஆண்டுக்காலச் சுதந்தர இந்தியாவின் வரலாற்றினைப் பார்த்தோமானால், பெண்களுடைய கல்விமுறை எந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது. அதற்கு நம்முடைய அரசியல் தலைவர்கள் தொலை நோக்குப் பார்வையோடு புதிய கல்விக்கொள்கையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைக் கூற விரும்புகின்றேன்.

உயர்திரு. நேரு அவர்களும், இந்திரா காந்தி அவர்களும், மறைந்த திரு. ராஜீவ்காந்தி அவர்களும், இன்றைய நாட்டின் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்களும் தொலைநோக்குப் பார்வையோடு பார்த்ததின் விளைவாக 1986-ஆம் ஆண்டு புதிய கல்விக்கொள்கையை இந்தியாவிற்குக் கொண்டு வந்தார்கள். திரு. ராஜீவ்காந்தி அவர்கள், இளைய தலைமுறையினர் மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாக, கல்வியிலே முதன்மை அளிக்கவேண்டும், உலகத்திலே இருக்கின்ற மிகச்சிறந்த கல்வி இந்தியர்க்குக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 1986-ஆம் ஆண்டு கல்விக் கொள்கையை இந்திய நாட்டிற்குத் தந்திருக்கின்றார்கள்.

கல்வித்துறையில் அனுபவம் மிக்க திரு. பரமசிவானந்தம் அவர்கள், உங்களைப் போன்ற மாணவர்களின் நோக்கைப் புரிந்து கொண்டு கல்விக்கொள்கையைச் செயல்படுத்தி வருகின்றார்கள். அருமைக்குரிய மாணவச் சகோதரிகளே! இக்கொள்கையை முன்வைத்து விஞ்ஞானச் சிந்தனை உங்களுக்கு வரவேண்டும். பழமையான சிந்தனைகளை மறந்துவிடாமல் அதே நேரத்தில் புதுமையான சிந்தனை களுக்கு இடம் தர வேண்டும்.

எல்லாரும் மனிதர்கள், எல்லாரும் மனித இனம் என்ற உணர்வு உங்களுக்கு வரவேண்டும். ஜாதி, இனம் வேறுபாடு, என்ற குறுகிய எண்ணங்களுக்கு நீங்கள் இடம் தரக் கூடாது என்பதுதான் என்னுடைய இந்த நேர வேண்டுகோள். அது தான் புதிய கல்விக் கொள்கையினுடைய அடிப்படை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக் குலைக்கின்ற முயற்சிகள் பல்வேறு முறைகளிலே இன்று நடைபெற்று வருகின்றன. நாற்பது ஆண்டுக்கால சுதந்திர இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் காப்பதற்கு மூன்று அரசியல் பலிகளை நாம் கொடுத்திருக்கின்றோம். இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் காந்தியடிகள் மதவெறியரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்கின்ற நேரத்திலே திருமதி. இந்திரா காந்தி அவர்களை இனவெறியர்கள் சுட்டுக் கொன்றார்கள். இருப்பத்தோராவது நூற்றாண்டிற்கு இளைஞர்களை அழைத்துச் செல்கின்றேன் என்று அறைகூவல் விடுத்த இளைஞரை இனவெறியர்கள் தமிழ் மண்ணிலே சாய்த்து விட்டார்கள். இவ்வளவு பெரிய உயிர்த் தியாகங்களைக் கொடுத்து இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக் காத்து வருகின்றோம்.

நான் என்ன சொல்ல விரும்புகின்றேன் என்றால், இந்தத் தியாகிகளின் வழியிலே வந்த நாங்கள் இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதற்காக எவ்வளவு உயிர்த் தியாகங்களை வேண்டுமானாலும் செய்யக் காத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்ல விரும்புகின்றேன்.

நான் இன்று குறிப்பிட்ட நேரத்திற்குக் கல்லூரிக்கு வந்தேன் என்றால் அதற்குக் காரணம், ஒன்று நான் படித்த கல்லூரியின் கண்டிப்பு, மற்றொன்று எங்களை அரசியலில் வளர்த்து விட்ட இந்திராகாந்தி அவர்கள், எங்களுடைய தலைமை எங்களை அவ்வாறு வளர்த்தது. அதுபோல நீங்களும் பெரும் விஞ்ஞானிகளாக, தலைவர்களாக, இந்திரா காந்திகளாக வரவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. இது போன்ற எண்ணங்களும், சிந்தனைகளும் உங்களுக்கு வரவேண்டும்.

அருமைச் சகோதரிகளே! பட்டம் பெற்று நீங்கள் வெளியே சென்றவுடன் வேலைக்காகப் பிறரை எதிர்பார்க்க வேண்டாம். மேலை நாடுகளிலே பெண்கள் தனியாகத் தொழில் செய்கிறார்கள். அந்தத் துணிவு உங்களுக்கு வர வேண்டும். இந்த நேரத்தில் ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இன்று வரதட்சணைக் கொடுமை நாடு முழுவதும் நடந்து வருகின்றது. அதற்குப் புதுமைப் பெண்களாகிய நீங்கள் இடம் தரக் கூடாது என்பதுதான் என்னுடைய ஆசை.

சகோதரிகளே! பெண்கள் கல்விக்காகத் தம்மை ஈடுபடுத்திக் கொடுத்து, பேராசிரியர் பரமசிவானந்தம் அவர்கள் இந்நிறுவனத்தை நடத்தி வருகின்றார்கள். இந் நிறுவனம் மேன்மேலும் சிறப்புற்றுத் தழைத்தோங்க வேண்டும் என்று வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

வணக்கம்,

**14-3-93 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் அண்ணாநகர்த் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். உயர்திரு. செல்லக்குமார் அவர்கள் ஆற்றிய உரை.**

---

மரியாதைக்குரிய விழாத் தலைவர் அவர்களே! வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை எடுத்துக் கூறி அமர்ந்திருக்கின்ற மத்திய தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு. திரு. அருணாசலம் அவர்களே! வள்ளியம்மாள் கல்வி அறத்தின் நிறுவனர் அவர்களே! பள்ளி, கல்லூரி முதல்வர்களே! ஆசிரியப் பெருமக்களே! பெரியோர்களே!

நான் எதிர்காலம் என்னவென்று தெரியாத நிலையில் தான் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வெளியில் வந்தேன். ஆனால் பொதுவாழ்க்கையில் என்னை ஈடுபடுத்திக் கொண்ட பின்புதான் இந்த நாட்டிற்கு நாம் செய்ய வேண்டிய கடமை என்னவென்று சிந்தித்துப் பார்ப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமானது பள்ளி, கல்லூரி வாழ்க்கை. அவ்வாழ்க்கையில் பொறுப்புணர்ச்சி ஏற்படுவதில்லை. இப்பொழுது நீங்கள் கடமையாற்ற வேண்டிய கட்டாய நிலையில் இருக்கின்றீர்கள்.

"ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது" என்பது போல, பட்டங்களும் பாடப் புத்தகங்களும் நம் வாழ்க்கைக்கு உதவியாக இருக்குமா என்று சொன்னால் அது நிச்சயமாக இல்லை. எனவேதான் 21ஆம் நூற்றாண்டிற்கு நம்மை அழைத்துச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு செயலாற்றிய எங்கள் தலைவர் மறைந்த திரு. இராஜீவ்காந்தி அவர்கள், தொழிற்கல்வியோடு சேர்ந்து வாழ்கின்ற முறையோடு சேர்ந்த ஒரு கல்வியையும் கல்வித்திட்டத்தில் கொண்டுவர வேண்டுமென்பதற்காகத்தான் உலகத்திலே உயர்வாகக் கருதப்படும் மனிதவள மேம்பாட்டுத்துறையை நிறுவினார். அந்தத் துறைக்கு, எதிர்காலத்தில் நாட்டு மக்களில் யார் வழி நடத்திச் செல்வார்கள்? எதிர்கால இந்தியாவுக்கு, எதிர்கால இளையதலைமுறைக்கு நீண்ட நெடுங்காலம் எடுத்துச் செல்லு

கின்ற ஒருவரே அமைச்சராக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தினை, கருத்தினை எடுத்துக் கூறினார்.

நம் வாழ்க்கை குறுகிய காலத்தில் முடிந்துவிடும். நமக்குப் பின்னால் இப்பொறுப்புணர்வு ஒரு பெரியவரிடம் கொடுக்கப்படவேண்டும் என்று நினைத்தாரோ என்னவோ தெரியவில்லை, திரு. இராஜீவ்காந்தி முதன்முதலாக அந்தத் துறையைத் தோற்றுவித்தபோது இன்றைக்கு இந்தியாவை உலகநாடுகள் எல்லாம் போற்றுகின்ற அளவிற்கு உயர்த்திய நம் பிரதமர் திரு. நரசிம்மராவைத்தான் அமைச்சராக நியமித்தார்கள். அந்தத் துறை மேம்பட்டு மனித ஆற்றல் மிக்க துறையாக விளங்குவதை அறிஞர் பெருமக்கள் பாராட்டுகின்றார்கள்.

கல்விக்காக இந்த அரசு பல கோடி ரூபாய் செலவு செய்து இந்நாட்டின் எதிர்கால வளத்திற்கு 'அறியாமையைத்தான் போக்கவேண்டும்' என்ற நல்ல கருத்தினைச் செய்து காட்டி யிருக்கிறது. இந்த நிலையிலே நாடு சென்று கொண்டிருக்கும் போது, நமது கடமை என்னவென்று பார்க்கும்போது சமுதாயத்திற்கு, நமது வாழ்க்கைக்கு, அதாவது சொந்த வாழ்க்கையை முன்னேற்றும்போது தானாகக் குடும்பம் முன்னுக்கு வருகிறது. அதன் காரணமாகத்தான் சொன்னார்கள் அந்தக் காலத்தில்.

> ''வரப்புயர நீருயரும்
> நீருயர நெல்லுயரும்
> நெல்லுயரக் குடியுயரும்
> குடியுயரக் கோனுயரும்''

என்று. எனவே, ஒவ்வொரு தனிமனிதனும் தனக்குள்ளே தெரியாதிருக்கின்ற ஆற்றலை வெளிப்படுத்தவேண்டும். நமது குடும்பம் முன்னேற, சமுதாயம் முன்னேறும்; சமுதாயம் முன்னேற நாடு முன்னேற்றம் அடைகின்றது. நாட்டு

மக்களும் முன்னேறுகிறார்கள். எனவே இந்நாட்டின் குடிமக்கள் அனைவரும் யார் ஆள்கின்றார்கள் என்றோ நாட்டை வழிப்படுத்துவது ஆளுகின்றவர்களின் பொறுப்பு என்றோ நினைக்கக்கூடாது. எனவே, நாட்டு மக்களுக்கு நாட்டுப்பற்று இருக்குமேயானால், தன்னுடைய கடமையைச் செய்வார்களேயானால், எதிர்கால இந்தியா உலகநாடு களிடையே போட்டியிடுகின்ற அளவிற்குச் சிறக்க முடியும், எப்பேர்ப்பட்ட அறிஞர்களைப் பெற்ற நாடு நம்நாடு என்பதை உலகநாடுகள் சொல்லுகின்றன. இன்றைக்கு இந்தியாவில் பட்டம் பெற்று வெளிநாடு சென்றவர்கள் பல துறைகளில் புகழ் பெறுவதை நாம் பார்க்கிறோம்.

எனவே, இளைய தலைமுறையினராகிய நீங்கள் நாடென்ன செய்தது நமக்கு என்று கூறிக் கொண்டு காலம் கழிக்காது, ‘நாம் என்ன செய்தோம் நாட்டிற்கு!’ என்று ஜான் கென்னடி கூறிய கருத்தினை மனத்தில் கொண்டு கடமையாற்ற வேண்டும் என்று இங்குப் பட்டம் பெற்றவர் களைக் கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி! வணக்கம்!

14-3-93ல் அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் வாழ்த்துச் சொற்பொழிவாக, 'கந்தன் கருணை' என்ற பொருளில் **திருமுருக. கிருபானந்தவாரியார்** அவர்கள் ஆற்றிய உரை.

---

இப்பட்டமளிப்பு விழாவில் ஞானமே வடிவாகிய வயலூர் வள்ளல் பெருமானுடைய தனிப்பெருங் கருணையினாலே நான் கலந்து கொண்டிருக்கிறேன். அன்பு நிறைந்த தாய்க் குலத்திற்கும், அருள் நிறைந்த பெரியோர்களுக்கும் பணிவான வணக்கம்.

கல்விக்கும், செல்வத்திற்குமுள்ள வேற்றுமையை இப்பொழுது எடுத்துச் சொல்லப் போகிறேன். செல்வம் மனிதனுக்கு இன்றியமையாதது. ஆனால் அதைக் காட்டிலும் உயர்ந்தது கல்வி. ஒருவன் பல நிறுவனங்களை அமைத்துப் பொருள் ஈட்டுகின்றான். சில ஆண்டுகளுக்குள் மாருதி கார், பெரிய பங்களா என்று பல லட்சம் பெறுமானமுள்ள பொருள் களுக்கு அதிபதியாகின்றான். ஆனால் ஒருவன் தனவந்தன் ஆகவேண்டுமென்றால் பலர் ஏழையாக இருக்க வேண்டும். ஒருபக்கம் மேடானால் பல பக்கம் பள்ளமாகும். ஒருவன் படித்து அறிவாளியாக வேண்டுமென்றால் பலர் மூடர்களாக இருக்க வேண்டும் என்பதில்லை. செல்வம் ஒருவரிடத்தி லிருந்து மற்றொருவரிடத்திற்குச் செல்லும். அறிவு என்பது மனிதனின் உள்ளத்தில் இருந்து வளர்ச்சி அடைவது. செடி வளர்வது போல அறிவும் வளர்கிறது, செடிக்கு நீர் வார்ப்பது போல அறிவுக்குக் கல்வி வேண்டும். இதையே,

''நீரளவே ஆகுமாம் நீராம்பல்; தான்கற்ற
நூலறிவே ஆகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகுமாம் குணம்''

என்று ஔவையார் பாடியுள்ளார். எத்தனைக்கு எத்தனை படிக்கிறோமா, அத்தனைக்கு அத்தனை அறிவிலே நுட்பம்

உண்டாகும். அறிஞர்கள் பேசுகிற பேச்சிலே அழகு இருக்கும். இனிமை இருக்கும். இதற்கு ஓர் உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். ஓர் அரசனுக்கு நீண்டகாலம் கழித்து அவன் குலத்தை வளர்க்க குழந்தையொன்று பிறந்தது. அந்த அரசகுமாரனுக்கு நீண்ட ஆயுள் இல்லை என்பதை மிக நயமான முறையில், "குழந்தையைக் காட்டிலும் தங்களுக்கு ஆயுள் அதிகம்" என்று உரைத்தான். உலகத்தில் எல்லாரும் விரும்புவது சுகம். துக்கத்தை யாரும் விரும்ப மாட்டார்கள். எங்கே அறிவு ஒளி வீசுகின்றதோ அங்கே சுகம் விளைகின்றது. வைரத்திற்குள் எப்படி ஒளி வீசுகிறதோ அதேபோல் அறிவு ஒளி விடுகின்றது. இதே கருத்தை,

"அகரமுதலென உரைத்து என்பதொரு அக்கரம்
அகில கலைகள் எதிலும் கொண்ட தத்துவம்
அபரிமித புழுதியின் அடங்கும் தனிப்பொருளை
எப்பொருமாய அறிவை அறிபவரறியும் இன்பம்தனை"

என்று அருணகிரிநாதர் உரைத்துள்ளார். அறிவினாலே இன்பம் உண்டாகும். ஞானிகள் எப்பொழுதும் சந்தோஷ மாக இருப்பார்கள். அப்பர்,

"ஏமாப்போம் பிணியறியோம்; பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை"

என்று கூறினார். "இடுக்கண் வருங்கால் நகுக" என்று வள்ளுவர் கருத்தும் இதையே சுட்டிக் காட்டுகிறது. மாற்றாந் தாயான கைகேயி இராமனிடத்தில் 'பரதன் நாட்டை ஆள, நீ கானகம் செல்ல வேண்டும்' என்று கூறிய போது, அவனுடைய திருமுகம் அன்றலர்ந்த செந்தாமரையை வென்றதாக அமைந்திருந்தது என்று கம்பர் அழகுற விளக்கு கிறார். ஞானிகள் கானகம் செல்வதற்கு வருந்துவது கிடையாது. இராமன் ஞானியாக இங்கு விளங்குகிறான். சுகத்தையும், துக்கத்தையும், இலாபத்தையும், நஷ்டத்தை

யும், இகழையும், புகழையும் ஒன்றாகக் காண்பவனே சிறந்த ஞானியாக முடியும்.

“புலன் ஐந்தும் வென்றான் தன் வீரமே வீரம்” என்று மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்தினையும் அடக்குவதே வீரம் என்கிறார் ஔவையார்.

அர்ச்சுனன், சிவபெருமானை நோக்கிக் கயிலை மலையிலே ஐந்து மாதங்கள் ஒரு காலிலே நின்று தவம் செய்தான். தேவர்களுக்கும் எட்டாத முழுமுதற் கடவுளாகிய சிவனிடத்தில் பாசுபத அஸ்திரத்தைப் பெற்றான். இன்று வரை இந்த அஸ்திரத்தைச் சிவனிடத்தில் பெற்றவன் அர்ச்சுனன் ஒருவனே. இந்திரலோகத்தில், இந்திரன் தன் பகைவர்களை அர்ச்சுனன் மூலம் வெல்லவேண்டும் என்ற நோக்கத்தோடு முடிசூட்டு விழாவிற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்த நேரத்தில், நாராயணனின் தொடையில் பிறந்தவளான ஊர்வசி தன் காதலை வெளிப்படுத்தும் வகையில் செயல்பட்டபோதும் அருச்சுனன் அவளைத் தன் தாயாகவே கருதினானேயன்றி வேறுவிதமாக நினைக்கவில்லை. இதிலிருந்து அவனுடைய புலனடக்கம் புலப்படுகின்றது.

புலனடக்கம் உடையவர்கள் தவநெறியில் வாழ்கின்றவர்கள், இத்தகைய தவநெறியில் வாழ்கின்றவர்களுக்கு அருள் புரிபவன் முருகப்பெருமான் ஆவான். முருகன் மெய்ஞ்ஞான பண்டிதன்,

திருமூலர்,

“முகத்தில் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்”

என்று கூறுகிறார்,

கச்சியப்ப சிவாச்சாரியாரும்,

"வஞ்சிக்கு மலரோன் ஆதிவானவர் உரைத்தெனக் கேளாய்
புந்திக்குள் இடறு செய்தந்த புதல்வனைத் தருதும்
அந்திக்கு நிகர் மெய் அண்ணல் அறிஞராய்ச்
சிந்திக்கும் தனது சொல்லைத் திருமுகம் ஆறும்
கொண்டான்!"

என்று முருகப்பெருமானின் சிறப்பைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

நெருப்பிலிருந்து தோன்றியவன் முருகன். ஆகாயம், காற்று, கனல், புனல், நிலம் என்னும் ஐந்திலும் நீக்கமற நிறைந்திருப்பவனும், மறைந்திருப்பவனும் முருகன்.

"அருவமும் உருவும் ஆகி
அநாதியாய் பலவாய் ஒன்றாய்ப்
பிரம்மமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனியாகி
கருணைக்கூர் முகங்கள் ஆறும்
கரங்கள் பன்னிரெண்டும் கொண்டு
ஒரு திருமுருகன் வந்து ஆங்கு
உதித்தனன் உலகம் உய்ய"

இவ்வாறு தோன்றிய முருகனுக்குப் பிறப்பு, இறப்பு என்பது இல்லை.

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்" என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். "பிறப்பிலி இறப்பிலி" என்று வில்லிபுத்தூரார் குறிப்பிடுவார். இத்துணை சிறப்புடைய முருகப்பெருமானுக்குப் பன்னிரு கைகள் உள்ளன. விலங்கினங்களுள் யானைக்கு மட்டுமே 'கை' உண்டு,

"யானைக்கு ஒரு கை
நமக்கு இரண்டு கை
இந்திரனுக்கு நான்கு கை
விநாயகருக்கு ஐந்து கை

தத்தாத்திரிக்கு ஆறு கை
அக்னி பகவானுக்கு ஏழு கை
பிரம்மாவுக்கு எட்டு கை
சிவனுக்குப் பத்து கை
முருகனுக்குப் பன்னிரண்டு கை''

நாம் நம் இரண்டு கைகளால் வணங்கினால் முருகனின் பன்னிரு கைகளால் நமக்கு அருள்கிட்டும்.

எம்பெருமான் முருகன் சரவணப் பொய்கையில் அடுக்குத் தாமரையில் தோன்றியவன். வள்ளுவர்,

''மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்''

என்று கூறியுள்ளார். ''மலர்'' என்பது நம் இதயக் கமலத்தைக் குறிக்கிறது. ஆண்டவன் நம் இதயக் கமலத்தில் வீற்றிருக்கின்றான்.

முருகப்பெருமான் ஒவ்வோர் ஆன்மாவையும் உய்விக்கும் பொருட்டு நம் இதயத்தில் வீற்றிருக்கின்றான். நாமனைவரும் உடம்பாகிய சிறையில் ஆட்பட்டிருக்கின்றோம். முருகனின் கருணை அச்சிறையிலிருந்து மீட்சி பெறச் செய்கிறது. பாம்பன் சுவாமிகள், ''கந்தக் கடவுளைப் போல் எந்தக் கடவுளுமில்லை'' என்பார்.

அந்த ஆறுமுகனின் கருணையினைப் பெற்று, தேர்வுகளில் வெற்றி அடைந்து, பிள்ளைகளாகிய நீங்கள் அனைவரும் நீண்ட ஆயுளைப் பெற்று, வளமான வாழ்வோடு, நல்ல நிதான புத்தியோடு, கூர்த்த அறிவோடு, நோயற்ற வாழ்வு வாழவேண்டும் என்று சொல்லி நீங்களனைவரும் எதிர் காலத்தில் நல்ல பதவியைப் பெற வாழ்த்துகிறேன். இதைக் கண்டு உங்கள் ஸ்தாபகர் வெகு மகிழ்ச்சி அடைவார். வள்ளியம்மையின் பெயராலே இக் கல்வி அறம் அமைந்துள்ளது. வள்ளிக்கும், ஞான சம்பந்தருக்கும் அதிகத்

தொடர்புண்டு. படிப்பதால் ஞானம் வரும். அதனால் இங்குப் படிக்கின்றவர்களுக்கு ஞானம் வளரும் என்பதில் ஐயமில்லை.

பொதுவாக அண்ணன்—அண்ணி, பொன்னன்—பொன்னி, சிங்கன்—சிங்கி, உத்தமன்—உத்தமி என்று குறிப்பிடுவது போல வள்ளன்—வள்ளி என்பர். தந்தை—வள்ளல்; தாய்—வள்ளி; அந்த வள்ளிநாயகனின் கருணை இந்தக் கல்வி அறத்திற்கு என்றைக்கும் உண்டு.

இந்த வெள்ளிவிழா நிகழ்ச்சியில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்த உங்கள் நிறுவனர் அவர்களுக்கும், மற்று முள்ள பெரியோர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு இந்த அளவில் என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

''உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் நிதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே''.

# Silver Jubilee Celebrations

## Sixth Day - 15-3-93 - Opening of the Statue

### (Smt. Vasanthi Devi:- former Vice Chancellor of the University for Women)

Respected Justice Gokulakrishnan, Esteemed M.L.A. Thirumathi Kavinilavu Dharmaraj, Respected founder Prof. Paramasivanandam, other eminent, dignitaries on the stage, distinguished invitees, learned principals, staff of these educational institutions of Valliammal Trust and dear Young Children. I feel it is a great previlege to have been called upon to unveil the statue of Thirumathi Valliammal in whose sacred memory the educational institution has founded by the founder Prof. Paramasivanandam—worthy son of a worthy mother who symbolise the good in Indian womanhood and ethically of humility, simplicity, culture, magnanimity, generosity, patience, tolerance and all other qualities. It is indeed a great honour to have been able to unveil the statue of this great and noble lady and in this occasion of the Silver Jubilee Celebrations. We do have to congratulate and felicitate the founder Prof. Paramasivanandam on account of whose vision and imagination tempered by robust pragmatism whose dianamism, humanism magnanimity, generosity, the institution has been making rapid progress within the span of 25 years. The college bearing that name also in the short span of six years has flourished in the world of academics. And we should also appreciate the rare gesture of his son naming the

education institution after his mother. Especially during these days when the children do not seem to appreciate filial gratitude, they owe to their parents. And going through the magazine of this institution I was shocked by the academic excellence of the students last year in the matiiculation and Higher Secondary examinations who secured 100%; in all the subject the college having secured a very high commendable percentage of pass in all subjects.

And within a short span the college which is offering job—oriented courses has made rapid progress and it is a matter of gratification that these institutions not only leave stress on the knowledge and skill components but also the attitude and value components to pass on the enormous opportunities given to the students for participation in co-curricular activities which would cultivate right habits and attitudes instil in them, the values of life, generosity, the leadership qualities, team spirit, awareness of human and social values. Consciousness of the light of the weaker section of society and the need to utilise their education for the betterment of the lot and the burning sense of patriotism with pride and holy heritage and all the qualities that take for good citizenship.

And we have everything the students of these institutions imbibing these values proving to be the best citizens of future India. It is true people of my generations who started their career after Independence has been to a large extent disappointed, disheartened, all he spectacle we find around us and communalism

raising their ugly heads. Violence being the order of the day in the great land of Buddha, Mahatma, apositles of peace and non-violence. These agitations being resorted to by every section of the Community for the result of their grievances probably believing as a Machavillian dictum-- the end justifies the means. But we have not lost hope. We have every bit of confidence that the youth of our country-you all who are bubbling with energy, enthusiasm and resourcefulnes all these are purposefully and effectively channelised and harnessed in the right direction. You, who will be the future citizens in whose delicate hands the destiny of nation trembles will live upto the ideal of Gandhiji whose philosophy is the quintiscent of Indian philanthropy having its anchorage in a deep vision of life in a society enlightened by knowledge, guided by reason united by love. We look forward to our youth the students who are in schools and colleges today are you all, to build a new India an India free from dirt, disease and poverty. free from casteism and communalism and India which is free from violence, India which will live upto the vision of our immortal Bharathy who envisaged the society in which men and women will have equality of status and opportunity.

India which will live in peace with her neighbours, raising her head high in the world committee of nations. This is possible because educational institutions like yours belive in realisation of objectives of education which is not just to sharpen an intelligence but broaden prespective widen outlook and horizon, deepen vision

and create a meaningful outlook. Education will allow, you to develop humility, culture, reverance for ideals, peace of mind and charity of heart and enable you to grasp spontaneously. Those unwritten rules and conventions enforced by any laws or statutes enable you to react to the situations with courage and confidence sobrity and constructive idealism enable you to develop imagination, enterprise, initiative prepare you for enlightened citizenship of not only the country but the world as a whole.

Students who have been brought up and nurtured by the Valliammal Trust educational institutions willl live upto all these ideals and you have before you a worthy example, your founder Prof. Paramasivanandam who is a scholar, philosopher who because of his generosity and magnanimity has given you all because of his interest in education and has done his best to promote the heart of education. I am happy the institution provides discipline to the students who are for conducting themselves in a good and disciplined manner, who have principals and teachers who like the founder have a sense of mission and purpose who guide the students to a large outlook and keen insight, who subjected themselves to duty with single minded devotion. It is a matter of gratification that they are growing from progress to progress and from success to success. There is no doubt that these institutions will live upto be the models of what educational institutions ought to be, citizens of learning and discipline, workshop of wisdom, nurseries of nation capturing great hearts inspiring in them the heart and the desire to find joy in all that is good and noble and beautiful. Thank you all very much.

# வெள்ளிவிழா ஆறாவது நாள்-
# வாழ்த்தியல் விழா

---

தமிழக அரசின் சட்டமன்ற உறுப்பினர் மாண்பமை **திருமதி. கவிநிலவு தர்மராஜ்** அவர்கள் ஆற்றிய உரை.

---

வள்ளியம்மாள் கல்வி அறக்கட்டளையினுடைய வெள்ளி விழா நிகழ்ச்சியினுடைய நிறைவுநாள் தலைவர் மதிப்புக்கும், மரியாதைக்குமுரிய உயர்திரு. நீதிபதி. பு.ரா. கோகுல கிருஷ்ணன் அவர்களே! இங்குச் சிலை திறந்து, விலை மதிப்பில்லாப் பெரும்பணியாற்றி அமர்ந்திருக்கும் பேரன்பிற்குரிய மகளிர் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திருமதி. கோ. வசந்திதேவி அவர்களே! வாழ்த்துரை வழங்கவிருக்கிற திரு. எஸ். பரமசிவம் அவர்களே! வள்ளியம்மாள் கல்வி அறத்தின் நிறுவனர் திரு அ.மு.பரமசிவானந்தம் அவர்களே! பெற்றோர்களே! தாய்மார்களே! மாணவ மாணவியர்களே!

எனக்கு நிறுவனர் அவர்களைப் பார்க்கும்போது மிகவும் வியப்பாக இருக்கிறது. நான் டில்லிக்குச் சென்ற போது ஆக்ராவில் மும்தாஜுக்காக ஷாஜகான் கட்டிய தாஜ்மகாலைக் கண்டு வியப்படைந்தேன். ஆனால் இங்கு வந்து பார்த்தபோது தன் தாய்க்காகச் சிலையைத் திறந்த நிறுவனரைக் கண்டு மகிழ்கிறேன்.

''வள்ளியம்மாள் பெண்கள் கல்லூரி'' என்று சொல்லும் போது பெண் சமுதாயத்திற்கே இது பெருமை தரக்கூடியது. பெண்கள் எதற்கும் உதவாதவர்கள் என்று இழிவாகப் பேசிய காலம் மாறி இன்று பெண்களே நாட்டின் கண்கள் என்று புகழ்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நான் முதன் முறையாக இக்கல்லூரிக்கு வந்தபோது புதிய இரண்டு துறைகளை வழங்கவேண்டும் என்று நிறுவனர் கேட்டார்கள். நாங்கள் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தரிடமும், புரட்சித்தலைவியிடமும், பல ஆட்சித் தலைவர்களிடமும் வேண்டி, பெண்களுக்குப் பெருமை தரக் கூடிய வகையில் அமைக்கப்பட்ட இக்கல்லூரிக்குப் பல துறைகளைக் கொடுத்தாலும் தகும் என்று வாதாடி, நிறுவனர் கேட்ட வகையிலே இரண்டு புதிய துறைகளைப் பெற்றுக் கொடுத்தோம்.

என்னை நிறுவனர் அவர்கள் மிக அதிகமாகப் புகழ்ந் தார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் இராமருக்கு அணில் செய்த சிறிய உதவியைப் போன்றது தான் இது. இங்கு வந்து பார்த்தபோது இது தலையா! கடலலையா என்பது போல நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள்.

அக்காலத்தில் பெண்களை எல்லாம் தெய்வங்களாக்கி வீட்டுக்குள் பூட்டி வைத்தார்கள். பெண்களையெல்லாம் உயர்த்துவது போல உயர்த்தி, மட்டம் தட்டி வந்தார்கள். நமக்கெல்லாம் அடுப்பையே இருப்பாக, நம் கடுப்பைக் கூடச் சொல்ல இடம் கொடுக்காது, உண்ண உணவும், உடுக்க உடையும் இருந்தால் போதும் என்று சொல்லி நாம் வருந்திக் கொண்டிருந்த நேரத்திலே தான், பெண்களுக்கு விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தவேண்டும் என்று சொல்லிப் பல பெரியவர்கள் நம்முடைய பிரதிநிதிகளாகத் தோன்றினர்.

அன்று சொன்னான் பாரதி.

''நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நேர்மையும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் உடைய
செம்மை மாதர் திறம்புவது இல்லையாம்''.

''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி''

என்று சொன்னார்.

இன்று நாட்டிலே பலருக்கும் ஆலோசனைகளைச் சொல்லுகின்ற அளவிற்கும் பெண்களின் நிலை உயர்ந்திருக் கிறது என்றால் அதற்கு வித்திடும் நிலையிலே இந்தப் பெண்கள் கல்லூரி அமைந்திருக்கிறது.

அன்று முதல் இன்று வரை பெண்களை இழிவு படுத்து கின்ற நிலையைக் காண்கிறோம். அன்று புலியை முறத்தால் விரட்டிய வீரப் பெண்களைக் காண்கிறோம்.

''ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி களிறு எறிந்து
பெயர்தல் காளைக்குக் கடனே''

என்று சொல்லக்கூடிய அளவிலே இந்நாட்டு நலத்திலே அரசனானாலும் சரி, சான்றோனானாலும் சரி அவர்களுக்கு முதல் ஆசானாக இருந்து வழி நடத்துபவள் பெண் என்பதை இந்நாட்டினர் உணர்ந்திருக்கிறார்கள். அப்படிப் பட்ட சூழ்நிலையில் பெண்களுக்காகவே உருவாக்கப்பட்ட இக்கல்லூரியில் படிக்கும் பெண்கள் பேரும் புகழும் அடைதல் வேண்டும்.

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப'' என்று சொன்ன வள்ளுவன் கூட, பெண்களிடத்தில் ஓரவஞ்சனையாக நடந்து கொண்டான் என்பதை நான் எடுத்துக்காட்டியுள்ளேன்.

வள்ளுவத்திலே புதுமையான குறள் என்று சொல்லி ஒரு சில குறளுக்கு நான் விளக்கமளித்து இருக்கிறேன்.

“தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்”

என்று சொல்லியிருக்கிறான். இதே குறளை ஆண்மைக்கும் சொல்லியிருக்கலாம்.

பெண்ணைப் பொறுத்தவரையில் பிறப்பது முதல் இறப்பது வரை ஆணுக்கு அடிமையாகப் படைக்கப் பட்டிருக்கிறார்கள். இக்கொடுமையை மாற்ற அடிப்படைக் கல்வி வேண்டும். கல்வியினால் தான் அறிவு வளருகிறது. அவ்வறிவை வளர்க்கின்ற ஊருணியாக இக்கல்லூரி திகழ் கிறது.

“தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை”

என்கிறான் வள்ளுவன். இக்குறளுக்கு வேறொரு விளக்கத்தை நான் என் நூலில் கூறியிருக்கிறேன். தெய்வத்தைத் தொழாது, கணவனால் தொழப்படுகின்ற பெண், பெய் எனச் சொல்ல மழை பெய்யும் என்று பெண்களுக்கு முன்னிலை கொடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

இவ்வாறு பெண்களை இழிவுபடுத்தியே பேசிக் கொண்டிருக்கிற காலத்தில் பெண்களுக்காகவே, தன் தாயின் பெயரால் இக்கல்லூரியை நிறுவி, பெண்களுக்குப் பெருமை சேர்ப்பதைப் பார்க்கும்போது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது.

விஞ்ஞானம் விரிந்து, மெய்ஞ்ஞானம் மெலிந்து, அஞ்ஞானம் அழிந்து, தஞ்ஞானம் தழைத்து, எஞ்ஞான்றும் எழுந்து நிற்கக் கூடிய இந்த ஞாலத்திலே, அது விரிக்கும் காலத்தின் கோலத்திலே, நம்முடைய உள்ளத்தின்

ஆழத்திலே இருக்கக்கூடியவர் யாரென்று சொன்னால் அது தாய்மைதான்; அது பெண்மைதான்; தன் தாயின் பெயரால் உருவாக்கப்பட்ட இக்கல்லூரியை நிச்சயமாகப் பாராட்டத் தான் வேண்டும்.

கல்லூரிக்குக் கல்லூரி, மாணவர்களுக்கு மாணவர்கள், இடத்துக்கு இடம் மாணவர்களின் இரசனை மாறுபடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே நம் கல்லூரியில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக, சீரிய கருத்துக்களை மாணவச் செல்வங்களிடையே வளர்த்துக் கொண்டிருக் கிறார்கள். இத்தகு கல்லூரி, சீரும் சிறப்பும் பெறவேண்டும். மேன்மேலும் பல துறைகளைப் பெறவேண்டும்.

நிறுவனரின் அயராத உழைப்பு, அன்னை வள்ளியம்மாளின் ஆசியோடு கோடிக்கணக்கான தாய்மார் களின் எண்ணங்களோடு இந்நிறுவனம் மேலும் மேலும் சிறக்கும், அதற்கு என்னாலான உதவியைச் செய்வேன் என்று கூறி என் உரையை முடிக்கின்றேன். நன்றி! வணக்கம்!

வெள்ளிவிழா ஆறாவது நாள் 15-3-93 (திங்கள்) தொடக்கக்கல்வி இயக்குநர் உயர்திரு. எஸ். பரமசிவம் அவர்கள் ஆற்றிய வாழ்த்துரை.

---

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய விழாத் தலைவராக வீற்றிருக்கின்ற மாண்புமிகு நீதிபதி பு. ரா. கோகுலகிருஷ்ணன் அவர்களே! வள்ளியம்மாள் கல்வி அறத்தின் நிறுவனர் அ. மு. ப. அவர்களே! சட்டமன்ற உறுப்பினர் அவர்களே! அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றிய திருமதி வசந்திதேவி அவர்களே! ஆசிரியப் பெருமக்களே! பெற்றோர்களே! மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே நீண்டதொரு சொற்பொழிவாற்றி அமர்ந்திருக்கிறார்கள். எனவே நான் இரண்டொரு கருத்துக்களை மட்டுமே கூறப் போகின்றேன். இந்தப் பள்ளியின் நிறுவனர் திரு. அ. மு. ப. அவர்கள், பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி, ஓய்வு பெற்ற பின்பு, தொடர்ந்து கல்வித் தொண்டைப் புரிவதற்காகவே இந்தக்கல்வி அறத்தை நிறுவினார்.

நான் ஒரு ஐந்தாண்டுக் காலமாக மத்திய கல்விக் குழுவின் மாநில அதிகாரியாகப் பணியாற்றிய போது, இது போன்ற கல்விக் கூடங்களைச் சந்திப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. நான் சந்தித்த கல்வியாளர்களில் அ. மு. ப. அவர்கள் மிகச் சிறந்தவர் என்பதை இங்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

தொடக்கத்தில் இந்நிறுவனம் C. B. S. E. பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டு, பின்பு Matriculation பள்ளியாக மாற்றப் பட்டது. பெற்றோர்களின் விருப்பத்திற்கேற்ப, சிறந்த கல்வித்தரத்தோடு இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இங்கு மாணவ, மாணவியரும் தேர்வில் நூற்றுக்கு நூறு விழுக்காடுகள் தேர்ச்சி பெறுகின்றனர்.

அண்ணா நகரில் பெண்களுக்காகக் கல்லூரியே இல்லை என்ற குறையை நிவர்த்தி செய்யும் வகையில் திரு. அ.மு.ப. அவர்கள் இச் சீரிய கல்லூரியைத் தோற்றுவித்து நடத்தி வருகின்றார். அவருடைய கல்விக் கூடங்களில் என்னைக் கவர்ந்தது மாணவ மாணவியரிடையே காணப்படும் ஒழுக்கம்.

இந்த வெள்ளிவிழாக் கூட்டத்தில் என்னையும் அழைத்து இளஞ்சிறார்களுக்குப் பரிசுகள் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். எனவே, இந்த விழாவில் கலந்து கொள்ள வாய்ப்புப் பெற்றமைக்கு நான் பெரிதும் மகிழ்ச்சி யடைகின்றேன். தன் தாயின் பெயரால் பெண்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் நடைபெறுகின்ற இக்கல்லூரி சிறந்த கல்விப்பணியைச் செய்து வருகிறது. இந்த நிறுவனம் மேன்மேலும் வளரவேண்டும். அதற்குப் பெற்றோர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

மாணவர்களாகிய உங்களிடம் நான் வேண்டிக்கொள்வது என்னவென்றால், உங்களுக்கு அளிக்கப்படும் வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். பரிசு பெற்ற மாணவர்களுக்கு எனது வாழ்த்துக்கள். நிறுவனர் நீண்ட ஆயுளோடு கல்விப் பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்று வேண்டி, நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

வெள்ளிவிழா ஆறாவதுநாள் 15-3-93 (திங்கள்) வாழ்த்தியல் விழா (பரிசளிப்பு விழா)

அன்னை வள்ளியம்மாள் சிலை திறப்பு நாளன்று குஜராத் மாநில உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை நடுவர் **தலைவர். உயர்திரு. பு. ரா. கோகுலகிருஷ்ணன்** அவர்கள் ஆற்றிய உரை.

---

வள்ளியம்மாள் கல்வி அறத்தின் நிறுவனர் அ. மு. ப அவர்களே! திருமதி. கோ. வசந்திதேவி அவர்களே! கடல் மடையைத் திறந்தது போலச் சொற்பொழிவாற்றிய திருமதி கவிநிலவு தர்மராஜ் அவர்களே! திரு. பரமசிவம் அவர்களே! பள்ளி, கல்லூரி முதல்வர்களே! ஆசிரியப் பெருமக்களே! இங்கு அமர்ந்திருக்கின்ற பெற்றோர்களே! மாணவர்களே! மாணவிகளே!

பச்சையப்பன் கல்லூரியிலே பேராசிரியராகப் பணிபுரிந்து, இந்த அருமையான கல்வி நிறுவனத்தை அண்ணாநகரிலே நிறுவி, சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள் என்பதைக் காணுகின்ற போது நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

''ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்துபெற்று, பையலென்றபோதே பரிந்தெடுத்தாளே வள்ளியம்மை.'' அந்த வள்ளியம்மை இந்த மைந்தனைத்தான் பெற்றெடுத்தார்கள் என்பதை நம்முடைய அ.மு.ப. அவர்கள் இன்றைக்கு நிரூபித்திருக்கின்றார்கள். ''தாய்மைக்கு மதிப்பு அளிக்க வேண்டும்'' என்ற தத்துவத்திலே பிறந்த அவர்கள் பெண்களுடைய கல்வியிலே தன்னுடைய நாட்டத்தைச் செலுத்தி, அண்ணாநகரிலே அருமையான கல்லூரியை நடத்தி வருகின்றார்கள். ஆகவே பெண்களுக்கு உயர்வு அளிக்கவேண்டும் என்றாலும் பரமசிவானந்தம் போன்ற ஆண்தான் தேவைப்படுகின்றார்கள். ஆகவே பரமசிவானந்தம் அவர்களை ஆண்களும், பெண்களும் சேர்ந்து வாழ்த்துகின்றோம்,

இங்கு உரையாற்றிய திருமதி. கவிநிலவு தர்மராஜ் அவர்கள் பெண்கள் முன்னேற்றத்திற்காக ஆணித்தரமான

கருத்துக்களை இங்கே கூறினார்கள். பெண்களை இழிவு படுத்துகிறவர்கள் யாராக இருந்தாலும் அது தடுக்கப்பட வேண்டிய ஒன்றுதான் என்பதை மிக அழகாக அர்த்தத்தோடு எடுத்துச் சொன்னார்கள்.

"வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கும் விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்" என்று பாடிய பாரதி ஓர் ஆண் மகன்தான். ஆகவே பெண்மையைப் பற்றிப் பாடுகின்றவர்கள் அந்தப் பெண்மை உயர வேண்டும் என்பதில் வேறுவிதமான கருத்துக்களைக் கொண்டவர்கள் அல்லர். பெண்மை என்பதும், ஆண்மை என்பதும் இருபாலாருக்கும் சொந்தம் என்று நான் கருதுகின்றேன். பெண்மையில்லாத ஆண்மையும், ஆண்மையில்லாத பெண்மையும் உலகத்திற்கே உகந்தவை அல்ல. எவனிடத்தில் அன்பும், பண்பும், பணிவும் இருக்கின்றதோ அவன் வாழ்க்கையில் உயருவான். அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி அதை வரவேற்போம்.

அச்சுறுத்தி வாழ்பவர்கள் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் தமிழ்ச் சமுதாயம் அதை வரவேற்பதில்லை. அன்பின் வடிவம்தான் பெண்மை. அன்பின் வடிவமாகத்தான் பெண்ணை வணங்குகின்றோமே யன்றி அச்சுறுத்துகிறாள் என்கின்ற நிலைமையில் பெண்ணை வணங்குவதில்லை. தாயை வாழ்த்துகின்றோமென்றால் அந்த இதயத்தில் இருக்கின்ற அன்பை வாழ்த்துகின்றோம். அருளை வாழ்த்துகின்றோம். ஆகவே அச்சுறுத்தி வணங்க வைப்பதில்லை பெண்மை. பெண்கள் எம்பொழுதுமே தவறு செய்தது கிடையாது.

இன்றைக்குக் கூட இந்த அருமையான கல்லூரியில் வருகின்ற அத்தனை பெண்களும் நம்முடைய கலாச்சாரத்தை

மறக்கக்கூடாது என்பதில் முழு அக்கறை செலுத்துகிறார்கள். சான்றாகக் கூறுவதென்றால் மாணவிகள் புடைவைகட்டிக் கொண்டுதான் வரவேண்டும் என்ற விதியை முழுமையாகப் பின்பற்றுகிறார்கள், ஆகவே நம்முடைய சமுதாயம் வாழ வேண்டுமென்றால் ஆண்களுடைய மனமும் மாறவேண்டும். பெண்ணினுடைய மனமும் மாறவேண்டும்.

கலிங்கத்துப் பரணியில் நம்முடைய சமுதாயத்தின் பெருமையை, பெண்ணினுடைய பெருமையை எந்த அளவிற்கு நம்முடைய மூதாதையர் எண்ணி வந்தார்கள்; எப்படி வாழ்ந்தார்கள் என்பதை உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகின்றேன். கலிங்கத்துப் பரணியிலே ஓர் அழகான பாடல்; பெண்ணினுடைய பெருமையைப் போற்றுகின்ற பாடல். புறநானூற்றுக் காலத்திலே பெண்கள் பெரும் புலவர்களாய்த் திகழ்ந்தார்கள். நாட்டை ஆண்டார்கள். நல்லன கூறித் தீயன களைந்தார்கள். இத்தகு உயர்ந்த பெண்களைக் கொண்டு விளங்கியது நம் தமிழ்ச் சமுதாயம்.

கலிங்கத்துப் பரணியில் ஓர் அழகான பாடல்.

''தரைமகடன் கொழுநன்ற னுடலந் தன்னைத்
தாங்காமற் றன்னுடலாற் றாங்கி விண்ணாட்
டரமகளி ரவ்வுயிரைப் புணரா முன்னம்
ஆவியொக்க விடுவாளைக் காண்மின்! காண்மின்!

இப்பாடலில், போரிலே மார்பில் அடிபட்டுக் கீழே விழ இருந்த தலைவனைத் தரைமகள் தீண்டக்கூடாது என்று தன் மடியிலே தாங்கிய மனைவி, அவன் விண்ணுலகம் சென்றால் அவனைத் தேவமகளிர் தீண்டிவிடுவார்களோ என எண்ணி அவனுக்கு முன்னதாகத் தன்னுயிரை விட்டு அங்குச் சென்று அணைத்துக் கொண்டாள். இதிலிருந்து அக்காலப் பெண்களின் பெருமை நன்கு விளங்குகிறது. ஆண்களும் பெண்களும் சமமாக வாழ்ந்த காலம் அது.

இந்நிலை இன்று மாறிவிட்டதே என்பதற்காகத் தான் இன்று பல குரல்கள் எழும்பியிருக்கின்றன. பெண்கள் உயர்வதற்குப் பெண்கள் மட்டுமன்று, ஆண்களும் குரல் கொடுக்கவேண்டும். ஆண்கள், பெண்களின் வாழ்க்கை உயர்வதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ அதைச் சிறப்புறச் செய்தல் வேண்டும். இதைத்தான் அ.மு.ப. செய்து வருகிறார்கள். அன்னை மேலிருக்கின்ற அன்பினால் அவர் பெயராலேயே ஒரு கல்லூரியை நிறுவி, ஆயிரக்கணக் கான மாணவிகளுக்குக் கல்வி கொடுத்து வருகிறார்கள். திரு. அ.மு.ப. அவர்களும், இந்நிறுவனமும் பல்லாண்டு சிறப்புற வாழவேண்டும் என வாழ்த்தி விடைபெறுகின்றேன். நன்றி! வணக்கம்.

# ஆசிரியர் அ. மு. ப அவர்கள் எழுதிய நூல்கள்—85க்கு மேல் தற்போது உள்ளன

| | | |
|---|---|---|
| இளமையின் நினைவுகள் | 2 | 50 |
| கொய்த மலர்கள் | 4 | 50 |
| அன்பச்சூழல் (நாவல்) | 2 | 00 |
| மக்கட் செல்வம் | 2 | 00 |
| பெண் | 1 | 00 |
| மனிதன் எங்கே செல்கிறான் | 1 | 00 |
| தாயின் மணி வயிற்றில் | 1 | 00 |
| தொழில் வளம் | 5 | 00 |
| வெள்ளிவிழாச் சொற்பொழிவுகள் | 3 | 00 |
| மலைவாழ் மக்கள் | 5 | 00 |
| சிறுவர்களுக்கு | 2 | 00 |
| வானொலி வழியே | 3 | 00 |
| நாலும் இரண்டும் | 2 | 00 |
| 19ம் நூற்றாண்டு உரைநடை | 8 | 00 |
| புதிய கல்விமுறை | 3 | 00 |
| பல்கலைக் கழகச் சொற்பொழிவுகள் | 20 | 00 |
| சாத்தனார் | 6 | 00 |
| கவிதை உள்ளம் | 5 | 00 |
| மு. வ. தமிழ்த்தொண்டு | 5 | 00 |
| வையைத் தமிழ் | 3 | 00 |
| கங்கைக் கரையில் காவிரித் தமிழ் | 5 | 00 |
| தமிழ்நாட்டு விழாக்கள் | 4 | 00 |
| காஞ்சி வாழ்க்கை | 5 | 00 |
| கவிதையும் வாழ்க்கையும் | 22 | 00 |
| வழுவிலா மணிவாசகர் | 7 | 00 |

## புதிய நூல்கள்

| | | |
|---|---|---|
| ஏழுநாடுகளில் எழுபது நாட்கள் | 36 | 00 |
| திரும்பிப் பார்க்கிறேன் திகைத்து நிற்கிறேன் | 16 | 00 |
| வரலாற்றுக்குமுன் வடக்கும் தெற்கும் (புதிய பதிப்பு) | 16 | 00 |
| தமிழர் வாழ்வு | 16 | 00 |
| ஓங்குக உலகம் | 16 | 00 |
| தாய்மை | 20 | 00 |
| கல்வி எனும் கண் | 12 | 00 |
| ஆனந்த முதல் ஆனந்த வரை | 42 | 00 |
| சான்றோர் வாக்கு (குறள் வழி) | 17 | 00 |
| நல்லவை ஆற்றுமின் (வானொலிப் பேச்சும் பிறவும்) | 20 | 00 |
| அருந்திறலாளர் அ. மு. ப. (மாணவர் தொகுத்தவை-1992) | 20 | 00 |